ISSN 2719 - 2520

# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

செப்டம்பர் - அக்டோபர் 2021

ஆண்டு 2 ▲ இதழ் 02



# இடைவெளி

நமக்குள் விழுந்த சிறு இடைவெளி
ஊதி ஊதி பெரிதாக்கப்பட்டது!
இடைவெளியின் ஆரம்பம்
நமக்கு தான் சொந்தமென்றாலும்
இன்று இத்தனை பெரியதாய்
உருமாறி நிற்க யார் யாரோ காரணம்!

நம்மை சுற்றி உள்ளவர்கள்
நம் மனம் புரிந்து செயல்படுகிறார்களா
அல்லது நம்மை பிரிக்க முற்படுகிறார்களா
தெரியவில்லை!

இருந்த போதும் தெரிந்து தெளிவு
பெறவெண்டும் நாம் நமக்கென்னவென்று
இருந்து விட முடியாது இல்லையேல்
பிரித்து மேய்ந்து விட்டு போய் விடுவார்கள்
நம் வாழ்க்கையை!

நமக்குள் பாலம் கட்டுவார்களென
எதிர்பார்த்தால் பாடையல்லவா
கட்டிக்கொண்டிருக்கிறார்கள்!

எல்லோரும் வாழ்ந்து கொண்டு
தான் இருக்கிறார்கள்
அவரவர்களுக்கான வாழ்க்கையை
நாம் மட்டும் தான் வீம்பால்
வீழ்ந்து கொண்டிருக்கிறோம்!

வாசல் என்றால் கதவிருக்கும்
வாழ்க்கையென்றாலும் கசப்பிருக்கும்
பக்குவமிருந்தால் கொஞ்ச காலம்
காத்திருந்து பார் வேப்பங்காயும் இனிக்கும்!

பழையவைகளை மறப்போம்
புதியவைகளை சிந்திப்போம் வா
உன் கரம் நீட்டு முழு நம்பிக்கையோடு
உன் வீட்டுப்படி தாண்டு புன் சிரிப்போடு
உன் வயிற்றிலும் புழுப்பூச்சி உண்டாகும்
நாளைய பட்டாம்பூச்சிகளாய் நம்
குழந்தைகள் வீட்டில் தவழ்ந்து மகிழ..!



- மகிழை.சிவகார்த்தி


# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

செப்டம்பர் – அக்டோபர் 2021

ஆண்டு 2 ▲ இதழ் 02

**ஆசிரியர் : சித்தி வஃபீரா**

editor & publisher : Sithy Wafeera

**கௌரவ ஆசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்**

Hon. editor : Tamilnenjam Amine

படைப்புகளின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.



படைப்புக்கள் அனுப்பவேண்டிய முகவரி:

email : muththamizh.kalasam@gmail.com

The editor of "Muththamizh kalasam",

23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka




# ஆசிரியர் பக்கம்

அன்பின் வாசகர்களுக்கு வணக்கம்!

இன்று நாம் எதிர்நோக்கியுள்ள கொடிய கொரோனாத் தொற்றினால், மிக அபாயகரமான இலக்கை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம். இவையனைத்திற்கும் காரணம், எமது அசமந்தமான போக்கும், வந்தால் பார்த்துக் கொள்ளலாம் என்ற அசட்டுத் துணிச்சலும்தான். நாளுக்கு நாள் சடுதியாக உயர்ந்து வரும் கோவிட் 19 மரணங்களின் எண்ணிக்கையும், தொற்றாளர்களின் எண்ணிக்கையும் மனதில் அச்சமூட்டிச் செல்கின்றன.

சமூக இடைவெளியுடன், முகக்கவசமணிந்து முறையாக சுத்தம் பேணி பாதுகாப்பாக இருந்தாலே போதும். இப்பாரிய தொற்றிலிருந்து எம்மையும் எம்மைச் சூழ இருப்பவர்களையும் காத்துக் கொள்ளலாம். நாட்டின் நிலை கருதி, இதை அடிக்கடி வலியுறுத்த வேண்டியுள்ளது. கூடியவரை வெளியில் செல்வதைத் தவிர்த்திடுவோம். உரிய நேரத்தில் தடுப்பூசியையும் ஏற்றிக்கொள்வது சாலச் சிறந்தது. குழந்தைகள்,சிறுவர்கள் மற்றும் முதியவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வோம். வைத்திய ஆலோசனைகளை முறையாகப் பின்பற்றுவோம். தேவையான சத்துக்களை மாத்திரையில் தேடாமல், சத்துக்கள் அடங்கிய உணவுகள் மூலம் பெற்று, உடலில் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்வோம். உணவுப் பழக்கவழக்கங்களில் மாற்றத்தைக் கொண்டு வந்து ஆரோக்கியத்தைப் பேணுவோம்.அனைவரும் பாதுகாப்பாக இருங்கள்!

- சித்தி வ.ஃபிரா




# இலங்கையில் முதல் தமிழ்ப் பெண் விமானி

இலங்கையில் விமானியாக பயிற்சியை வெற்றிகரமாக முடித்து, ஸ்ரீலங்கா விமான சேவையொன்றில் பதவிக்காக விண்ணப்பித்து விமானியாகப் பறக்கக் காத்திருக்கும் சரண்யா சிவசுப்ரமணியம். இவர் நுகேகொட றோயல் இன்ஸ்ட்டிடியூட் சர்வதேச பாடசாலையில் க.பொ.உயர்தரம் வரை கற்றவர். (இவர் வணிக மேலாண் மையில் பட்டதாரியுமாவார்) இவரின் சகோதரி ஒரு டாக்டர். அதனாலேயே தானும் தனித்துவமாகத் திகழ வேண்டுமென்பதற்காகவும், பெண்கள் பலரும் விமானப் போக்குவரத்து (Aviation) துறையைத் தேர்ந்தெடுத்து கற்கிறார்கள் என்ற விழிப்புணர்வை நம் பெண்கள் மத்தியில் கொண்டுவரவும் இதற்கான கற்கைநெறியைப் பயில ஆரம்பித்த தாகக் கூறும் இவர், தனது இந்த துணிச்சலான கற்றல் பணிகளை



2015 இல் ஆரம்பித்ததாகவும் ஒரு ஊடக நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கான பயிற்சிக் கல்லூரியில் முறையாகப் பயின்று, அதற்கான பயிற்சியும் பெற்று ,அத்தனைத் தேர்வு களிலும் வெற்றி பெற்ற சரண்யா அதற்கான அனுமதிப் பத்திரங்களுடனும் [PPL(private pilot licence), CPL(commercial pilot licence), multi engine] தனியாக ஒரு விமானத்தைத் தன் கட்டுப்பாட்டில் இருத்தி பறக்கும் சகல தகைமைகளையும் பெற்றிருக்கிறார். இலங்கையிலேயே இதற்கான கற்கைநெறிகளைக் கற்றுத் தெரிவான முதல் இலங்கைத் தமிழ்ப்பெண் விமானி இவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

ஒரு விமானியாக தொழில் ரீதியாகத் தகுதி பெற 200 மணித்தியாலங்கள் பறந்திருக்க வேண்டும் என நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. இவரோ, இதுவரை ஏறத்தாழ 225 மணித்தியாலங்கள் வான்பரப்பில் பறந்திருக்கிறார். பெண்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து பெண் இனத்தையும்,நம் தாய்நாட்டையும் பெருமிதம் கொள்ளச் செய்து, அனைத்துத் தகைமைகளுடன் தன்னம்பிக்கையும் உறுதி யும் கொண்டு, உத்தியோகபூர்வமாக எல்லையில்லா வானில் சிறகு விரிக்கக் காத்திருக்கும் இளம்பெண் சரண்யாவுக்கு, முத்தமிழ் கலசம் நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துகளைத் தெரிவிக்கிறது.

(மன்னாரைச் சேர்ந்த இமானுவேல் எவாஞ்சலினா விமானியாகத் தன் பயிற்சியை முடித்துக் கொள்ள இன்னும் இரண்டு ஆண்டுகள் எஞ்சி இருக்கும் நிலையில் எம் இதழ் சார்பாக அவரும் வெற்றிவாகை சூட வாழ்த்துகிறோம்)

பட உதவி
லங்காஸ்ரீ
மற்றும்
Openskies flight training

# ஆறுதல் வேண்டாம்

நிலைக்கண்ணாடி பெரும் ஒளியாய்
வார்த்தை கீற்றுக்களில்
வலிப்பெற்ற காயங்கள்
தனிமை இடைவெளிகளில்
மெதுவாய் உள்நுழையும்.

ஆறாத வடுக்களுக்காய்
தலைக்கோதும் விரலும்
சிரம்சாய்க்கும் மடியும் தேடுவதில்
மனம் களைத்து தான் போகிறது.

மாற்றங்களுக்குள்
புகுத்திக்கொண்டால்
எதுவும் மறக்காத மனம்
அப்படியே இருக்கிறது.

யாவும் கூறலாம் என்பதில்
ஒரு கோப்பை வாழ்க்கையில்
மௌனம் நிரம்பிக்கிடக்கிறது.

இருட்டு குடைக்குள் இமைகள் மூடி
இதயம் விழித்து கிடக்கிறேன்.
ஆறுதலைவிட அமைதி போதுமென...

**தினுஷா**
கண்டி

# குருட்டு நம்பிக்கை

எனது கருணை மனுவைப்படிக்குமுன்
தயவு செய்து உனது காதுகளையும்
கண்களையும் திறந்து கொள்

புதிதாக நுழையும்
சட்டத்திற்குள் எம்மை
வன்முறை செய்வதை நிறுத்தச் சொல்

நீ எம்மை பார்க்க மாட்டாய்
உனது கண்கள்தான் கட்டப்பட்டு
விட்டதே

எனது சத்தம் அந்தக் கறுப்புத்
துணிக்குள் ஊடுருவி
நிச்சயம் உன்
செவிப்பறைகளை உடைக்கும்

உன் தராசுத் தட்டில்
எம்மை எடை போடும்
அதிகாரத்தை அகதிகளானபோதும்
நாங்கள் மறுக்கவில்லையே

இப்போதாவது வாய் திறந்து பேசு
கட்டவிழ்த்து கபடமாடுவதைப்பார்
எம்மை வதைப்பதை நிறுத்தச் சொல்

உன் மீது நம்பிக்கை இருக்கிறது
ஏனென்றால் நீதான் நீதி
தேவதையாச்சே...

**முனையூர் முல்லை**

# தொலைந்தேனே

பார்த்த கணமே பார்வையில் நான் தொலைந்தேனடா
பள்ளி காதல் அது என்றும் பசுமையானதடா
முதல் முதலாய் ஆணின் சகவாசம் முகவரி தந்தாயடா
பருவம் வந்த செய்தியே உன் பார்வையில் தானே உணர்ந்தேன்.
உன் புருவ வில்லின் அழகை புகழும் மொழியும் நான் அறியேன்.
விடுமுறை இன்றியே நீ பேச இரு விழிகள் இமைக்க மறப்பேன்.
மயிலிறகாய் என் தலை வருட மங்கை நான் தவம் கிடப்பேன்.

பள்ளி நாட்கள் வசந்தமாய் வர
விடுப்பு நாட்களோ வெறுப்பை தர
விடியும் போது உன் முகம் காண
விடியா இரவுகளை விரட்டி அடித்தேன்
முதற்காதல் எப்போதும் எல்லோர்க்கும் மறக்கமுடியாததே
அது தரும் அனுபவத்தை வேறெதுவும் தருவதில்லையே!

**- நிலு.**
பண்டாரவளை.



# மத்யமர்கதை

கவிச்சிகரம்

அ.முத்துவிஜயன்

அவரை அன்னிக்கி ரயில்வே
ஸ்டேசன்லதான் பாத்தேன்

என்னாதம்பி எப்புடிருக்கே நல்லா
ருக்கியான்னு விசாரிச்சாரு

நல்லா ருக்கேன் னேன் வேலையெல்லாம்
எப்புடிப் போகு துன்னாரு

நல்லாருன்னுண்ணேனேன் இன்னு
மெத்தனை வருடம் சர்வீசுன்னார
சொன்னேன் பரவாயில்ல அடுத்த
சம்பளக்கமிசனப் பாப்பீகன்னாரு
ஆமாண்ணேன் ஆண்டவன் சித்தமிருந்தா
நடக்கும்னேன்
வீடுவாசல் வாங்கி வைச்சிருக்கையான்னு
கேட்டாரு இருக்குன்னேன்
யாருபேருலன்னாரு எல்லாம்
பொண்டாட்டிபேருல...

நானும் அப்புடித்தான் வைச்சிருந்தேன்னு
மேலபாத்துச்சொன்னாரு
டீ சாப்பிடலாமான்னுகேட்டேன்
ஒடஞ்சிட்டாரு

நாலு இட்லியாவாங்கிக்குடுக்குறியான்னு
கண்ணுல தண்ணிவந்துருச்சுஎன்னா
அண்ணேன் நீங்க ரயில்வேலதான
வேல பாத்தீங்க பென்சனெல்லாம்
உண்டாச்சேன்னு இழுத்தேன்

ஆமாதம்பி எல்லாமே இருக்கு ஆனா
எதுவுமே இல்லன்னாருபுரியலயேண்
ணேன் அதுதான் தம்பி உண்மைன்னாரு

அவருக்கு கிராமத்துல பேரே ரயில்
நடராஜன் ன்னுதான்பெருசுக என்னாயா
ரயில்வேன் னுதான் கூப்புடுவாக
ரயில்வே குடும்பபாஸ் வருசத்துக்கு
ரெண்டுதடவ கெடச்சதுனால அடிக்கடி
குடும்பத்தோட டூர்போவாரு பழனி
ராமேஸ்வரம்ன்னுபோய்ட்டுவந்து
சொந்தக்காரவுகளுக்கு பஞ்சாமிர்தம்
தீர்த்தம்ன்னு,ஏதாவது குடுப்பாரு
வாங்குறவுக எங்களாலதான்போகமுடியல
பிரசாதமாவது குடுத்து
சாமியக்காட்டுற நல்லாருப்பான்னு
கொஞ்சப்பேருவாழ்த்துவாக சிலர் ஊரு
சுத்துற வகுசியக்காமிக்கிறான்

ரயில்ல வேலை அரசாங்க
உத்தியோகம்ன்ற திமிரும்பாக
நடராசன் அண்ணன் எல்லாத்துக்கும்
ஒரு சிரிப்புத்தான் அண்ணன்
தம்பிபுள்ளைகளைக்கூட சிலநேரம்
கூட்டிட்டுபோவாரு

அதுலயும் பாராட்டவிட பகைதான்
மிஞ்சும் என்னையக் கூட்டிட்டு போகல
ஒன்னையக் கூட்டிட்டுப்போகலன்னு
பஞ்சாயத்துதான்
ஊருக்குள்ள அவரோட தெருவுல லோன்
போட்டு மாடிவீடுகட்டுனாரு
பொண்டாட்டிபேருல மீனாட்சி
இல்லம் நு பேருவைச்சி தடபுடலா
கெரகஹப்பிரவேசம் வைச்சி
ஊருக்கெல்லாம் சோறுபோட்டாரு
அப்பையும் இதே மாதிரிதான் நல்லா
சாப்புட்டுப்புட்டு வகுசியகாமிக்கிறான்
ரயில்வேக்காரன்னு சாடபேசுனாக
கடன் யாராவதுகேட்டா சொல்லிடுவாரு
கடன் அன்பை முறிக்கும்னு
அதுனாலயே கஞ்சன்றபேரும் அவருக்கு
உண்டு ஏன்னுகேட்டாவாங்குனாத்
திருப்பித்தரமாட்டாய்ங்க பிள்ளைகளுக்கு
குடுப்போம் பின்னாடி நம்மள
அவங்கதான பாத்துக்கிடனும்
கடமைம்பாரு

அவருதான் இப்போ இந்த நெலமையில
நிக்கிறாரு இட்லியும் வடையும் ரயில்வே
கேண்டீன்ல வாங்கிக்குடுத்தேன்
சாப்பிட்டாரு முடிச்சவுடன
டீசாப்பிட்டோம் ரெண்டுபேரும்
சொல்லுங்கண்ணே என்னதான் ஆச்சுது
உங்களுக்குன்னேன்

வீடுபொண்டாட்டிபேருல
இருந்துச்சாஅவள ஏமாத்தி
மகன்அவன் பேருக்குமாத்திக்கிட்டான்
வெளியசொல்லமுடியாம நெஞ்சடைச்சுச்
செத்துபோனா மகராசி செட்டில்மெண்ட்
பணத்ததிருப்பித் தராம் ப்பான்னு
வாங்குன மகன் அமுக்கிட்டான்

பென்சனைவைச்சி கடையில்
வாங்கித் திண்ணுக்கிட்டு பொழப்ப
ஓட்டிட்டு இருந்தேன் பேங்க பென்சன்
அக்கவுண்ட்ஏ.டி.எம் கார்ட ஒருநாளு
ஒடம்பு சரியில்லாம இருந்தப்ப
காசெடுத்துவரக் குடுத்தனுப்பிச்சேன்
காசும் வரல கார்டும் திரும்பிவரல என்ன
பண்ணுறதுன்னு தெரியலரயில்வே
ஸ்டேசன் வந்தா பழைய நண்பர்கள்
வருவாங்க அவங்ககிட்ட ஏதாவது
வாங்குவேன் பொழப்புஓடும்
இப்பஎன்னப் பாத்தாலே அவங்க
தவிர்க்கிறது தெரியுது
தற்கொலைசெஞ்சுக்கலாமன்னு
யோசிக்கிற அளவுக்குப் போயிட்டேன்
நாளைக்கி அவனத்தான எல்லாரும்
கேப்பாங்கன்னு மனசுவரலன்னாரு

பேசாம கார்டு தொலைஞ்சி
போச்சின்னு பிளாக் பண்ணிட்டு
வேறகார்டு வாங்கவேண்டியதுதான
இவனுகளை இப்புடித்தான்
சமாளிக்கனும்ன்னேன் செஞ்சேப்பா
ஆனா அதைதெரிஞ்சிக்கிட்டு
மறுபடியும் வந்துகார்ட புடுங்கிட்டுப்
போயிட்டான்

ஆனா என்னா மாசம் இப்போ ஆயிரம்
ரூவா குடுக்குறான் எனக்குப்பத்தல
அதான்னு இப்புடின்னு அவரு
அழுதுட்டாருநான் வேணா போலீசை
வைச்சி மிரட்டட்டுமா ஆளிருக்குன்னேன்
வேணாம்பா இப்புடியே கொஞ்சநாளு
ஓட்டிட்டு அவகிட்டயே போய்
சேந்துடுறேன் ரொம்ப நன்றிப்பா
நீவாங்கிக்குடுத்த இட்லிக்கும் டீக்கும்
நீயும் பாத்து நடந்துக்க சொத்து
பத்து விசயத்துல சாக்கிறதா யிருன்னு
சொல்லிக்கிட்டே கிளம்பிட்டாரு

அவரை வற்புறுத்திக் கையில கொஞ்சம்
பணம் கொடுத்தேன் அழுதுட்டாரு...
அதுகுள்ள ரயில் வார அறிவிப்புகேட்டுச்சு

பாக்கலாம் அண்ணேன்னு சொல்லிட்டுக்
கௌம்புனேன் கும்புட்டார் நீ
நல்லா இருக்கனும்னு சொல்லி ரயில்
கிட்ட போய்த் திரும்பிப்பாத்தேன்
வாழ்க்கையில நம்பி ஏமாந்த பெயில்
நடராசன் பிளாட்பாரத்துல உருவம்
என்கண்கள் நனைய மறைத்தது
இப்படியும் இருக்காங்களே சிலர்ன்னு
கண்ணத் தொடச்சிட்டு ரயில்ல
ஏறுனேன்...

# மாறாதோ? வாழ்நிலை

எண்சீர் விருத்தம்

துயில்நீங்கும் விடிகாலை துயர்நீக்கும் வழியுண்டோ?
தொழில்செய்து பொருளீட்ட கால்கள் ஓடும்
வெயிற்கைகள் நிலம்நீவ விளைபயிர்கள் வெந்துலர
விழியாக்கை கருமுகிலாய் மழையைத் தூவும்
உயிர்மீது துன்பளிக்கும் உலைநீரோ? தினம்பாய
உளப்பூவும் நகையிழந்து வருந்தி வாடும்
மயிற்பீலி மருந்தன்ன வாய்மொழியில் தனைத்தேற்றி
மறுநாளும் ஏழைமனம் அதையே ஏற்கும்...

உடல்வருத்தி வெயில்மழையில் ஓய்வின்றிச் செய்தொழிலில்
உளச்சான்றை முன்னிறுத்தி உழைக்கும் போழ்தும்
தொடர்கதையில் சிலபக்கம் தொலைவதன்ன வருமானம்
தொலைகின்ற நிலைவந்து மனத்தை வாட்டும்
கடன்பெறுதல் கடனடைத்தல் கண்ணீரில் தத்தளித்தல்
கனல்வீசும் மீள்வினையாய் முகத்தைக் காட்டும்
படர்கொடிபோல் பசிநோயோ? பல்லுறுப்பின் கிளைபிடித்துப்
படும்துன்பை மிகைசெய்யும் உயிர சைத்தே...

பள்ளிக்குள் கால்வைத்துப் பார்உயரப் பயில்வோருள்
பால்வற்றிப் பழுத்துவிழும் எருக்கி லைபோல்
பள்ளத்துள் செலும்வாழ்வில் படிப்பறிவு போதுமெனப்
பலரிடையில் தொழிலுக்குள் வருந்தி வீழ்வர்
எள்ளுக்குள் விழுமெள்ளை எவர்கண்கள் கண்டறியும்
இவர்வாழ்வும் அஃதன்ன தொலைய வாழ்வர்
முள்ளுக்குள் குயிலொன்று முகாரியில் பாடுநிலை
முப்பொழுதும் இவர்வாழ்வில் தொடர்வ தேனோ?...

**இதயம் விஜய்**
ஆம்பலாப்பட்டு

---

## என்னுள் ஒளிவிளக்கு

கண்ணொளி காணவில்லை கண்மணி ஆகின்றாய்...
நாடி நரம்பெல்லாம் யாது ஆகின்றாய்...
அண்டத்தார் அகமகிழ யாக்கை யானவனே...
நெஞ்சிக்குள் குடியிருந்து அவனி ஆனவனே...
போற்ற உனை வார்த்தையில்லை
உன்னை விட வேறு யாருமில்லை...

**கதிரவன் மதி**

# நல்லதே நடக்கும்

## சாய்லக்ஷ்மி

ஒரு ராஜா ஒரு கோவிலில் தன் பிறந்த நாளை முன்னிட்டு அன்னதானம் செய்துகொண்டிருந்தான். அப்போது ஒரு பரம ஏழை வந்து வரிசையில் நின்றான்.

அவனை பார்த்த மற்றவர்கள் முகம் சுளித்து ஒதுங்கி நின்றனர். இதை உணர்ந்த அந்த ஏழை, இவர்களுக்குத்தான் நம்மை பிடிக்கவில்லையே, வரிசையில் நிற்காமல் ஒதுங்கி நின்று எல்லோரும் அன்னதானம் பெற்றபின்பு நாம் வாங்கிக் கொள்வோம் என்று தள்ளி நின்றான். நேரம் போய்க்கொண்டே இருந்தது. இவன் தள்ளி நின்றதால் இவனுக்குப் பின்னால் வந்தவர்கள் எல்லாரும் அன்னதானம் பெற்றார்கள். சிலர் அன்னதானம் பெற்றுக் கொண்டு இவனை ஏளனம் செய்து சிரித்துவிட்டுப் போனார்கள்.

இவன் வாயைத் திறந்து எதுவும் சொல்லவில்லை என்றாலும் மனதிற்குள் ஒரு சோகம். எல்லோருக்கும் தரப்படும் அன்னதானம் கூட நமக்கு கிடைக்க எவ்வளவு காத்திருப்பு? எவ்வளவு போராட்டம்? எவ்வளவு இழிசொல்? போன ஜென்மத்தில் என்ன பாவம் செய்தோமோ இப்படி தவிக்கிறோமே? என்று தன் விதியை நொந்துகொண்டான். மாலை வரை காத்திருந்து காத்திருந்து, சரி நமக்கு இன்று பட்டினி என்று எழுதியுள்ளது போல 'அப்பனே ஆண்டவா... என்னை ஏனப்பா இப்படி ஒரு இழி பிறவியில் பிறக்கச் செய்தாய்' என்று கோபுரத்தை பார்த்து மனதில் உள்ள தன் குமுறலைச் சொல்லி, கோவில் அருகே உள்ள குளத்தங்கரையில் அமர்ந்தான். குளத்து நீரை கையில் எடுத்து முகத்தை கழுவி, படியில் சோர்வாக அமர்ந்தான்.

ராஜா அன்னதானம் கொடுத்து முடித்து, அந்த படித்துறையில் காலாற நடந்து வந்தார். ‘‘என்னப்பா...சாப்பிட் டாயா?’’ என்று ஒரு பத்தடி தூரத்திலிருந்து குளத்தில் தன் முகத்ததை பார்த்துக் கொண்டிருந்த அந்த ஏழையிடம் கேட்டார். கேட்பது ராஜா என்று தெரியாமல் «ஊரே சாப்பிட்டது..என் தலையில் இன்று பட்டினி என்று எழுதியுள்ளது போல அய்யா» என்று விரக்தியாக, முகத்தை திருப்பாமல் குளத்து நீரை பார்த்தபடியே பதில் சொன்னான் அந்த ஏழை.

அவன் சொன்ன பதில் ராஜாவின் மனதை உருக்கியது. என் பிறந்தநாளில் ஊர் மக்கள் யாரும் பசியுடன் உறங்கச் செல்லக் கூடாது என்றுதானே அன்னதானம் ஏற்பாடு செய்தோம்? ஒரு அப்பாவி ஏழை இப்படி விடுபட்டுள்ளானே என்று அவன் அருகில் சென்று அவன் தோளில் கை வைத்து ‘‘மன்னித்துவிடப்பா... ரொம்ப பசிக்கிறதா உனக்கு?’’ என்று கேட்க. குளத்து நீரில் தலையில் கிரீடம், காதல் குண்டலம்,

---

உதிர்ந்த இறகுகள்
ஒற்றுமையாய் ஒதுங்குகின்றன
சேவல் சண்டை

**- கா.ந.கல்யாணசுந்தரம்**

காகித கப்பல்
மழையில் நனைகிறது
திறந்தவெளி

**- சுஜாதா அருணாச்சலம்**

நெற்றியில் திருநீர், முகத்தில் வாஞ்சை என்று ராஜா தெரிய திடுக்கிட்டு எழுந்தான். 'ராஜா… நீங்கள்என்றுதெரியாமல்அமர்ந்துகொண்டே பதில் சொல்லிவிட்டேன்… மன்னிக்க வேண்டுகிறேன்' என்று பதறினான். இவனின் பதட்டத்தை பார்த்த ராஜா சத்தமாக சிரித்தார். 'வா… இன்று நீ என்னோடும் ராணியோடும் விருந்து உண்ணப்போகிறாய்' என்று அவனை பேசவிடாமல் இழுத்துச் சென்று அவரின் தேரில் ஏற்றிக்கொண்டு, அரண்மனைக்கு விரைந்தார். 'போய் குளித்துவிட்டு வா' என்று தனக்கென்று வாங்கி வைத்திருந்த புதிய ஆடைகளில் ஒன்றை அவனுக்கு கொடுத்தார். குளித்து, புத்தாடை அணிந்து வந்தான். அறுசுவை விருந்து கொடுத்தார். சாப்பிட்டு முடித்து அவன் கையில் ஒரு குடம் நிறைய பொற்காசுகளை கொடுத்தார் 'இன்றிலிருந்து நீ ஏழை இல்லை…இந்த பணத்தை வைத்து நீ விரும்பும் தொழிலை நேர்மையாக செய்து கௌரவமாக வாழ்» என்று வாழ்த்தினார்.

அதுவரை அமைதியாக இருந்த ஏழையின் கண்ணில் தாரை தாரையாக கண்ணீர் கொட்டியது. 'ஏனப்பா அழுகிறாய்?' என்று ராஜா கேட்க. «நான் இதுநாள் வரை பிறவி ஏழை என்று மட்டும்தான் நினைத்திருந்தேன் ராஜா… இந்தத் தருணம்தான் நான் ஒரு பிறவி முட்டாள் என்று புரிந்துகொண்டேன்» என்று சொன்னான். ராஜா ஏன் அப்படிச் சொல்கிறாய் என்று கேட்க «வாழ்க்கையில் இன்றுதான் முதல் முறையாக கோபுரத்தை பார்த்து என்னை ஏன் இப்படி வைத்திருக்கிறாய் என்று ஆண்டவனிடம் கேட்டேன்… கேட்ட சில நிமிடங்களில் உங்களை அனுப்பி என் தலையெழுத்தையே மாற்றிவிட்டான்…கடவுளிடம் கேட்டால் நாம் கேட்டதைவிட இன்னும் பல மடங்கு தருவான் என்று இன்றுவரை புரியாமல் ஒரு முட்டாளாகத்தானே இருந்துள்ளேன்» என்று சொல்லி அழுதான்.

நமக்கு ஒன்று கிடைக்கவில்லை என்றால் சராசரியைவிட மிகச் சிறந்த ஒன்றை நமக்காக கடவுள் தரப்போகிறார் என்று நம்புங்கள். நல்லதே நடக்கும்.

ஒற்றை காலில்
நடராசர் சிலைகள்
திருவாச்சி பிடிமானத்தில்.

- பா.சிவா

# அன்பெனும் ஆறுதல் மொழி

மூடிய முகத்திற்குள்ளும்
மூடப்படாத மனதிற்குள்ளும்!
உறவுகள் பாழாகி,
காத்திருப்புகள் காலாவதியாகி,

எண்ணற்ற உறவுகள் பல
எண்ணிலடங்கா ஏக்கங்களுடன்
பிறப்பிற்கும் இறப்பிற்குமிடையே
பயணிக்க பாலமின்றி…

கிணற்றுத் தவளையாய்
தவித்துக் கொண்டிருக்கின்றார்கள்!
முன்னேற்ற மூச்சுக் காற்றின்
முகவரி தேடி
தேய்ந்து கொண்டிருக்கின்றார்கள்!

சமத்துவ மனமுடைய
குணாளர்களே, குணவதிகளே!

வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம்
வாடி நிற்போரின்
வாழ்வில் வசந்தம் வீசிட…
ஆறுதல் மொழிகள் தொடுத்த
இன்சொற்களை வாஞ்சையுடன்
வாரி இறைத்து!

நேசக் கொடியேற்றி
பாசம் விதைக்கத் தயங்காதீர்!

**நஸ்ருதீன் ஷா**
மலேசியா

# இசையும் நானே இசைவதும் நானே!

இது தான் எல்லை
இது தான் உன் கொள்கை
என்ற நிலைப்பாட்டை
நீ எட்டும் தருணத்தில்....

நீ எதுவாக இருக்கின்றாயோ
அதுவாகவே நிலைத்திடு
அப்படியே நீ வாழ்ந்திடு!

நடக்கின்ற சாலை மலர் மணக்கும்
பசுஞ்சோலையாக பாதை வகுக்க,
நீ சேருமிடமும்
சேதாரமில்லாதொரு சிறப்பிடமே!
மாற்றானின் மகுடி இசைக்கு
மயங்கி ஆடுவதை விட
உன் மனம் இசைக்கும்
மந்திர இசையில் இணங்கிடு,
இன்பமுடனே இசைந்திடு

**கவிரசிகன்**
மலேசியா

# பின்

பிறப்பிற்கு பின் வாழ்வு
வாழ்விற்கு பின் இறப்பு
அழகிற்கு பின் அகங்காரம்
பகலிற்கு பின் இரவு
இருளிற்கு பின் ஒளி
தனிமைக்கு பின் இனிமை
படிப்பிற்கு பின் பட்டம்
பட்டத்திற்கு பின் பதவி
பதவிக்கு பின் நேர்மை
தோல்விக்கு பின் வெற்றி
வெற்றிக்கு பின் அடக்கம்
துன்பத்திற்கு பின் இன்பம்
குழப்பத்திற்கு பின் தெளிவு
கஷ்டத்திற்கு பின் இஷ்டம்
சண்டைக்குப் பின் சமாதானம்
தூக்கத்திற்கு பின் விழிப்பு
விழிப்பிற்கு பின் களைப்பு
வீழ்ச்சிக்குப் பின் எழுச்சி
செலவிற்குப் பின் வரவு
வரவிற்கு பின் செலவு
உழைப்பிற்கு பின் உயர்வு
உயர்விற்கு பின் செழிப்பு

**தமிழ் எழுத்தழகி இவள்...**
**இளம் தாரகை**
**ஷஹ்னா ஸப்வான்**,



# ஞ

ஞமனென (துலாக்கோல்) நீதிகள் செய்க
ஞப்தியில் (அறிவதில்) உலகினை ஆள்க
ஞமனையும் (யமனையும்) இளகிடச் செய்க
ஞலவலின் (மின்மினி) எரிதலும் ஓய்க
ஞமலியின் (நாயின்) உருட்டலும் தீர்க
ஞயமுடன் (நயமுடன்) புலமது வாழ்க
ஞமனியின் (துலாக்கோல்) சார்புகள் வீழ்க
ஞலருதல் (முழங்குதல்) வெற்றியில் சேர்க!

**- கண்ணதாச முருகன்**

# காரணங்களும் காரியங்களும் நலமே

மனித வாழ்வு காரணகாரிய விதிகளினால் பின்னப்பட்டிருக்கிறது காரண காரியமென்ற பொறிக்குள்தான் வாழ்வெனும் சக்கரம் பிணைக்கப் பட்டிருக்கிறது

பொறிகளும்விதிகளும்வாழ்வெனும் சக்கரத்தில் வெற்றியையும் தோல்வியையும் இன்பத்தையும் துன்பத்தையும் மாறி மாறி பயணிக்க விடுகிறது. இம்மாற்றங்களில் மகிழ்ச்சிகளின் போது காரணங்கள் ஆராயப் படுவதில்லை வெற்றியொன்று கிடைக்கும் போதும் காரணங்கள் தேடப்படுவ தில்லை.

மாறாக, இவ்வாழ்வில் வலியோ, துன்பமோ, துயரமோ, இழப்போ அபகரிப்போ கைமாற்றமோ ஏமாற்றமோ நடந்து விடுகையில்தான் காரணங்களை கூறுகிறோம் காரணவாதிகளை சாடுகிறோம்.

இல்லையென்றால் நிகழ்ந்து விட்ட எல்லாவற்றுக்குமே நானேதான் காரண மென்று இடிந்து போய் விடுகிறோம்.

நிகழ்ந்துவிட்ட துயரங்கள் காரணமின்றி நிகழவில்லை, நிகழ்ந்து கொண்டிருக்கும் நிகழ்காலமும் காரண மின்றி நிகழவில்லை, நடக்கவிருக்கும் நிகழ்வுகளும் காரணமின்றி நிகழப் போவதில்லை.

எனவேதான், தோல்விகளில் தான் நம் பிழையான அணுகுமுறைகளை திருத்திக்கொள்ளலாம் அபகரிப்பில் தான் தட்டிப்பறிக்க காத்திருந்தவர் களை அடையாளம் காணலாம் ஏமாற்றத்தின் போதுதான் நம் நம்பிக்கை களை அலசி ஆராயலாம் இழப்புகளின்போதுதான் நாம் வலிமையானவர்களாக மாறிக் கொள்ளலாம்.

முகத்திற்கு முன்னால் ஒரு வேசமும் பின்னால் ஒரு வேசமும் போடும் நாடகக்காரர்களின் சுயரூபங்கள் நாம் உடைந்துபோய்க் கிடக்கும் தருணங் களில்தான் கோரமுகம் காட்டிநிற்கும்.

துரோகிகளில்லையென்றால் இறுதிவரை தூக்கத்திலேதான் நடப்போம் காலில்முட்கள்குத்தினால்தான்நம்நடையில் நிதானம் பிறக்கும் பின்னாலிருந்து முதுகில் குத்தும் கோழைகளுமில்லையென்றால் நம் பகுத்தறிவுக்கு வேலையில்லை தோல்விகளுமில்லையென்றால் நம் வெற்றியின் முயற்சிகள் எழுச்சி கொள்ளப்போவதில்லை.

ஆகவேதான், நடந்துவிட்ட எதிர் பார்த்திராத மோசமான நிலைகளுக்கு அதுதான் காரணம் இதுதான் காரணம் அவர்தான் காரணம் இவர்தான் காரண மென காரணங்களையே கட்டிப் பிடித்துக்கொண்டு தோல்விகளையே கொண்டாட விட்டுக்கொண்டு இனி என்னதான் செய்வதென திகைத்து நின்றால் நடக்கப்போகும் காரியங்களைக் கூட சிறப்பானதாய் மாற்றிக்கொள்ளக் காரணங்களை சீர் செய்திட முடியாமல் போய்விடும்.

நம் கண்ணீருக்கு யார்யாரோ எது எதுவோ காரணமாக இருக்கட்டும் ஏன் நாமாகக் கூட இருக்கலாம் பரவாயில்லை விட்டுத்தள்ளுவோம். முடிந்துபோன சம்பவங்கள் பல மர்ம முடிச்சுகளை அவிழ்த்துவிட்டிருக்கும். புதிய வியூகங் களை நம்மால் வகுக்க முடியும் நம்மை அடித்து வளைத்த காரியங்களையும் காரணங்களையும் கொண்டே நம்மை நாமே அடித்து நிமிர்த்திக்கொள்ளலாம். ஆதலால், காரணங்களும் காரியங்களும் நலமே.

மயிலிறகு மனசு
சிபானா அஸீம்.

# குறுங்கவிதைகள்

# பாரியன்பன்

**1.நான் மாறவில்லை**

நான் எப்போதும் போலவே
இப்போதும் இருக்கிறேன்.
முன்பைவிட எண்பது
விழுக்காடுகளுக்கு மேல்
மாறி இருக்கிறாய் நீ.
உமக்குத் தேவையாய்
இருக்கிறது மாற்றம்.
நான் மாற்றத்தை
எதிர்ப்பவனல்ல.
அதை வரவேற்பவனுமல்ல.
காலம் எல்லோரையும்
மாற்றிவிடும் என்கிறாய்.
ஒருநாள் என்னையும்
மாற்றிவிடும் என்பது
உன் கருத்தாக இருக்கிறது.
எந்நிலையிலும் மாறாமலிருக்க
என் பிடியிலேயே
வைத்துக் கொண்டிருக்கிறேன்
என்னை.
உன்னைக் காலத்தின்
அடுக்குகளில் திணித்து விட்டு
மாற்றத்தின் பிடியில்
சிக்கித் தவிப்பதாய்
இப்போதும்
புலம்பிக் கொண்டிருக்கிறாய்.

**2.தீபம்**

தலையில்
கிரீடமாகச் சுடரும்.
நாவில்
சுழன்று ஒளிரும்.
கையில்
அகண்டு எரியும்.
விரல்களில்
அரும்பிப் பூக்கும்.
வயிற்றில்
கருவாய்ச் சுமக்கும்.
உடல்
உருகிக் கரையும்.
பாதம் நெருங்கியதும்
ஓய்ந்து மறைந்திடும்.

**3.கவிதையும் கழுதையும்**

எழுதிய கவிதைத் தாளினை
எல்லோரிடமும் காண்பித்து
இது உனக்கானது
உனக்காகவே எழுதியது
என்கிறேன்.
ஒருவரும் அதை
ஆமோதிப்பதாக இல்லை.
அந்தக் கவிதைத் தாளினைக்
கசக்கி வீச
தின்று முடித்தது
பசியோடிருந்த கழுதை....!

**4. தவிக்கும் சொல்**

வாசித்துக் கொண்டிருந்த
புத்தகத்தில்
அடையாளத்திற்கென
மடித்து வைத்த
காகிதத்தின் முனையில்
வெகு நேரமாய்
சிக்கித் தவிக்கிறது
வலிமை மிகுந்த ஒரு சொல்.

**5.என் ஆசைகள்**

இதுவரை
என் ஆசைகளை
எவரிடமும் பகிர்ந்தில்லை.
போதிய நேரமிருந்தும்,
அதை எடுத்துரைக்க
என்னிடம்
ஏதுவான வார்த்தைகளில்லை.
சிறிய தாளில்
என் ஆசைகள் அனைத்தையும்
யாருக்கும் தெரியாமல்
எழுதி வைத்து பிரார்த்திக்கும்
என் மகளுக்கு
எடுத்துரைத்த இறைவனுக்கு
நன்றி என்ற ஒரு சொல்
போதுமானதாக இருக்காது.



பாரியன்பன்
குறுங்கவிதைகள்

# காதல் அலைகள்



கே.என். இராமகிருஷ்ணன்

அதோ அங்கே பார் அந்த ஜோடி எப்படி இன்பமாய் விளையாடு கிறார்கள்.

உங்கள் பார்வை ஏன் இப்படி வக்கிரமாகிறது என்ற நொடித்தாள் கமலம் என்கிற கமலம்மாள் தன் கணவன் ராஜேந்திரனிடம்.

இருவரும் ஐம்பது கடந்த வயதினர் என்பதையும் இங்கே சொல்ல வேண்டியிருக்கிறது.

கமலம் உனக்கு இவர்கள் யாரென்று தெரிகிறதா?

இன்று உங்கள் புத்தி ஏன் இப்படிப் போகிறது. அந்த இளஞ் ஜோடிகள் நெருக்கமாய் இருப்பதைப் பார்த்ததும் உங்களின் பொறாமைத் தீ கொழுந்து விட்டெரிகிறதோ? நாமும் அந்த வயதில் இப்படித் தானேயிருந்தோம்.

ஆமாம், இருந்தோம். முணுக் கென்று கோபக்கனல் வீசுவாயே சில பொழுதுகளில். அது போகட்டும் இவர்களை உனக்கு நிஜமாகவேத் தெரியவில்லையா?

ஏன்? ஊரிலிருக்கும் ஜோடி களையெல்லாம் யார் என்று தெரிந்து கொள்வது தான் எனது வேலையா? உங்களுக்குத் தான் வேறு பிழைப் பில்லை.

அதில்லை கமலம், இவர்கள் நமக்குத் தெரிந்தவர்கள். நமது வீட்டுக் கருகில் வசித்தவர்கள். நன்றாகப் பார்.

எனக்கொன்றும் தெரியவில்லை. யாரென்று நீங்களே சொல்லுங்கள்.

கமலத்தின் முகத்தில் சலிப்பின் ரேகைகள் ஓடிக் கொண்டிருந்தன.

கமலம் நமது வலது பக்க வீட்டில் இருந்தவன் தான் அந்தப் பையன், இடது பக்க நேரெதிர் வீட்டி லிருந்தவள் தான் அந்தப் பெண். அந்தப் பையனின் பெயர்கூட ராகவ் என்றழைப்பார்களே அந்தப் பெண்ணின் பெயரோ ரோஷினி. இப்போது ஞாபகம் வருகிறதா?

ஓ,, அந்தப் பொடிசுகளா இவர்கள்.?

ஏன் பொடிசுகள் என்றும் பொடிசுகளாகவே இருப்பார்களா? இளைஞர்களாயிருந்த நாம் இப்போது வயோதிக வாசலில் நிற்கிறோமே அவர்கள் இப்போது இளஞ் ஜோடி களாய்விட்டனர். எவ்வளவு அன்பும் காதலும் பார்த்தாயா?

ஆமாம் அந்த இளசுகள் எப்போது கீரியும் பாம்புமாய் சண்டை யிட்டுக் கொள்வார்களே. எத்தனை முறை நாம்கூட அவர்களை விலக்கி விட்டிருக்கிறோம். அப்புறமும் ஒன்னோடொன்னு சண்டையிடுமே. அந்த பிள்ளைகளா இவர்கள். அந்தப் பெண்ணின் கழுத்தில் தாலிகூடக் காணப் படுகிறதே. கல்யாணம் ஆகி விட்டதோ?

வா. நாம் இப்போது தானே நம் சொந்த ஊருக்கு வந்திருக்கிறேரம். நம் வீட்டிற்குப் போவோம். நமது வேலைக்காரம்மா வீட்டை சுத்தம் செய்து வைக்கிறேன் என்று சொல்லி யிருந்தாள். வா போகலாம் என அழைத்தவர் விடுவிடென நீண்ட நாட்களுக்குப் பிறகு தன் கிராம வீட்டிற்கு நடக்கத் தொடங்கினார். பின்னாலேயே கமலம்மாளும் நடந்தாள்.

இவர்களுடைய பேச்சை அரை குறையாகக் காதில் வாங்கிய ராகவும் ரோஷினியும் சிரித்துக் கொண்டார்கள்.

அவர்கள் சொன்னது சரி தானே ரோஷினி.

ஆமாம் நம்மில் யார் கீரி யார் பாம்பாய் இருந்தோமாம். அதையும் அவர்கள் சொல்லியிருக்கலாமே.

சில நேரம் நீ கீரி சில நேரம் நான் கீரி, அதே போல் பாம்பின் பாத்திரத்தையும் இருவரும் மாற்றி மாற்றி செய்தோம் தான். அதனால் தான் அவர்கள் பொதுவாக கீரியும் பாம்பும் என்றார்களோ?

ஆனாலும் ராகவ் நீ என் தலை முடியைப் பிடித்திழுக்கும்போது என்ன வலி வலிக்கும் தெரியுமா?

நீ கூடத்தான் என் முதுகில் உன் பஞ்சுக் கைகளால் ஓங்கி அறையும் போது எனக்கு உயிர் போவது போல் வலியிருக்கும் தான்.

இருவரும் கட்டிப் புரண்டு சண்டையிடப் பெரியவர்கள் நம்மைப் பிரித்து அவர்கள் பங்குக்கு இரண்டி ரண்டு அடிகள் கொடுத்து நம்மை வீட்டுக்கு அனுப்புவார்களே.அப்பப்பா. சண்டைகளா அல்லது அவை விளை யாட்டுகளா?

விளையாட்டு தான் ராகவ். அப்போது நம் இருவருக்குமே அது தெரியாதிருந்திருக்கிறது. அந்த சண்டை களில் தான் நம் அன்பும் காதலும் வளர்ந்ததோ? மோதலில் ஏற்படும் காதல் என்பார்களே.

அது இளம் வயதினருக்கான மோதலும் காதலும். நம் மோதல் சிறு வயதிலல்லவா ஏற்பட்டது.

அது இளமைப் பருவம் வரை வளர்ந்ததே

மோதலைச் சொல்கிறாயா?



ஆமாம் ஆமாம். பிறகெப்படி நம் மோதல் முடிவுக்கு வந்தது? உனக்கு ஞாபகமிருக்கிறதா?

ஒ. அதை மறக்க முடியுமா என்ன?

எதை நீ வயதுக்கு வந்ததைச் சொல்கிறாயா?

ஆமாம். உன்னையும் என்னையும் இனி சேரக் கூடாது, சண்டையிடக் கூடாது, தொட்டுப் பிடித்து விளையாடக் கூடாது என்றெல்லாம் நமக்கு உத்திரவு போட்ட நம் பெற்றோரே இதற்கான பிள்ளையார் சுழி.

ஆமாம் ரோஷினி, உன்னைப் பார்க்காமல் நான் பட்ட பாடு எனக்குத் தானே தெரியும்.

எனக்கும் தான் நீ என்னை அடிப்பதிலும் ஒரு சுகம் என்பதை அப்போது தான் உணர்ந்தேன்.

பல நாட்கள் நாம் சந்திக் காததால் ஒரு முறை சந்தித்தபோது நான் உன்னிடம் ஓடி வந்தேனே

ஆமாம் நான் கூட நீ என்னோடு சண்டையிடத்தான் வருகிறாயோ என நினைத்தேன். ஆனால் நீயோ என்னை அப்படியேக் கட்டிப் பிடித்தாய்.

கட்டிப் பிடித்த போதே என் உணர்வுகள் என்னை ஆட்டிப் படைத்தன அது எனக்கு உண்டான முதல் அன்பானது.

எனக்கும் தான் நீ என்னைக் கட்டிப் பிடித்ததுமே என்னுள் ஏதோ உடைந்ததுபோல் ஒரு உணர்வு.

உன் பருவம் செய்த மாயம். அதை நான் உணர்ந்த மாயமாயிருந்தது அது.

ஆனால் அதைப் பார்த்து விட்ட நமது உறவுப் பெண் ஒருத்தி உன் அம்மாவிடம் சொல்ல பிறகு அவர்கள் நம் இருவரையும் மீண்டும் பிரித்து வைத்தார்களே. அங்கே தான் காதல் விழிப்படைந்தது.

நான் சில காலம் கழிந்து வேலைக்குப் போனபோது வெளியூர் செல்ல வேண்டிய நிலையாயிற்று

ஆனால் நீ தான் அடுத்த 6 மாதத்திலேயே நம் ஊர் அடுத்த டவுனுக்கு டிரான்ஸ்பர் வாங்கி வந்தாயே. வெளி நாட்டுக்குப் போகும் நல்லதொரு சான்சைக்கூட எனக்காக விட்டு இங்கு வந்தாயே. என் மீது உனக்கு அவ்வளவு காதலிருந்தது என்பதறிந்த நேரமது. என்னாலும் உன்னை மறக்க முடியாததால் நானும் நம் டவுனிலேயே ஒரு பள்ளியில் ஆசிரியைப் பணியை ஏற்றுக் கொண்டேனே.

அதை வைத்துத் தான் நம் பெற்றோர் நம் காதலைப் புரிந்து கொண்டார்கள். நம் காதலுக்கு அவர்கள் மரியாதை செய்யும் நிமித்தமாக நமக்குக் கல்யாணமும் செய்து வைத்தார்கள்.

பாவம் இதெல்லாம் அந்த மாமா மாமிக்குத் தெரியாது. வீட்டிற்குப் போன அந்த வயதான தம்பதிகள் நம் நிலைபற்றி இப்போது விவாதம்கூட நடத்திக் கொண்டிருக்கலாம்.

ராகவும் ரோஷினியும் சொன்னது போலவே அங்கே ராஜேந்திரனும கமலம்மாளும் அதைப் பற்றித் தான் பேசிக் கொண்டிருந்தார்கள்.

வேலைக்கார அம்மாளிடம் அந்த ஜோடி பற்றிக் கேட்டார்கள்.

ஆமாங்க, அந்தச் சின்னஞ் சிறுசுகள் சண்டையிட்டுக் கொண்டு தானிருந்தன. அந்தச் சின்னப் பெண் எப்போ வயசுக்கு வந்ததோ, அதுங்களுக் குள்ள என்ன மாயம் நடந்ததோ தெரியவில்லை ஒன்னோ டொன்னு ஈஷிக்க ஆர்ம்பிச்சத நானே பார்த்தேனுங்க

பார்த்தியா கமலம். விதி அவர்களுக்கு நல்லதைத் தான் செய்திருக்கிறது. இப்போது அவர்கள் கணவன் மனைவியாகி விட்டார்கள். அன்பும் உண்மைக் காதலும் நிலையானது, நிரந்தரமானது என்று இப்போது

புரிகிறதா உனக்கு

ஆமாங்க, இனி நான் எதற்கும் உங்களிடம் சிடுசிடுக்க மாட்டேன்ங்க. அது போலிதான் என்றாலும் அதுவும் கூட இனி நமக்குள் வேண்டாங்க

அந்த இளஞ் ஜோடி தான் நம் வாழ்விலும் நிரந்தர அன்பை வளர்த்தார்கள் என்பதால் அவர்களை வாழ்த்துவோம் வா என அவர்கள் வீட்டுக்கு அழைத்தார் ராஜேந்திரன் கமலத்தை.

அவர்கள் இப்போது தான் எதிர்த்த வீட்டைப் பார்த்தார்கள். அது புதுப்பிக்கப்பட்டு அழகாக இருந்தது. கீழே இரண்டு போர்ஷன்களும் மேலே ஒரு இரண்டு அறை கொண்டதுமாக, வெற்றிடம் ஒப்பனாகவும் இருக்க அதற்கும் மேலே தண்ணீர்த் தொட்டிகள் வைக்கப்பட்டிருந்தன.

வாங்கவாங்கஎனஅழைத்தனர் ராகவின் தாய் தந்தையர், அடுத்த போர்ஷனிலிருந்து வந்த ரோஷினியின் பெற்றோரும் வரவேற்றனர்.

என்ன இருவரும் இங்கேயே வந்து விட்டீர்களா?

ஆமாம், பிள்ளைகள் இருக்குமிடம் தானே சொர்க்கம். அதுதான் நாங்களும் ஒன்றாகவே இருக்க முடிவு செய்து விட்டோம். பேச்சுத் துணைக்கும் எல்லாவற்றிற்கும் வசதியாக இருக்கின்றது இப்போது.

சாப்பாடு?

# கொலுசுச் சத்தம்



பூந்தளிர் பூப்பாதம் தாங்கி நிற்கும்
புத்தம்புது கால்கொலுசு செய்த தவமென்ன?
சித்திரப் பெண்ணிவள் சிரிப்போடு போட்டியிடும்/
கண்ணாடி கைவளையல் கலகலத்துப் பாட்டிசைக்க
சேர்ந்து கொண்டு சுருதி சேர்க்கும்
இளையராஜா இன்னிசையில் கண்மயங்கும் வேளையிலே
செவிதனைத் தாக்குதடி நீவரும் கொலுசுச் சத்தம்

ஆற்றங்கரையில் குளித்துவிட்டு செல்லும் போது
பொற்பாதம் சத்தமிட்டு காளையின் மனசு
கரைகடந்து போகுதடி! கால்தடத்தில் புதையுதடி

தோழியர்கள் புடைசூழ கோயிலைச் சுற்றிவர
என்னையே சுற்றுதடி உந்தன் கொலுசுச்சத்தம்

திருமண விழாதனில் நிற்காமல் மாயமாக
என் கண்கள் சுற்றுதடி சத்தத்தின் பின்னாலே

கொட்டும் மழையிலும் தென்றல் காற்றிலும்
இடியின் ஓசையிலும் இன்னிசை விருந்திலும்
சொக்கும் மனசை மிஞ்சியதே கால்கொலுசு
வாழ்க்கையை வசந்தமாக்கி பூந்தோட்ட மலராகி
என்னுயிர் மீட்டிடும் நாதமடி நீ எனக்கு

**நாகலெட்சுமி இராஜகோபாலன்**

அதை தனித்தனியே சமைத்தாலும், பெரும்பாலும் அதைப் பகிர்ந்தும் உண்போம்.

எல்லோரும் இப்படி ஒற்றுமையாயிருந்தால் எந்த இனச் சண்டைகளும் போராட்டங்களும் நடக்காதே.

நாங்களும் உங்கள் மூன்று குடும்பத்திற்கு நன்றி சொல்லவே வந்தோம்.

எதற்கு நன்றி.

சில விஷயங்களில் எங்களுக்குள் சிறுசிறுசண்டைகள்வந்துகொண்டிருந்தன. இன்று காலையில் உங்கள் பிள்ளைகளின் அன்பையும் இப்போது உங்களுடைய அருகாமையையும் பார்த்ததும் எங்களுக்குள்ளும் மாற்றங்கள் வந்து விட்டன. அதற்குத்தான் நன்றி.

அப்போது மாடியிலிருந்து ரோஷினியும் ராகவும் இறங்கி வந்து இவர்களுக்கு வணக்கம் சொன்னார்கள்

அம்மா, அப்பா என இருவரும் கோரசாக அவர்கள் பெற்றோர்களை அழைத்து, எங்களுக்கு லண்டனுக்கு போகும் ஆர்டர்கள் வந்துள்ளன. இரண்டு பேருமே ஒரே இடத்தில் இருக்கும்படியாக வேலை அமைக்கப் பட்டிருக்கிறது என்று சந்தோஷ செய்தி சொன்னார்கள்.

எல்லோருக்கும் மகிழ்ச்சியாயிருந்தாலும் அந்தச் சின்னஞ் சிறுசுகளைப் பிரிய வேண்டியிருக்கிறதே என்ற வருத்தமும் குடிகொண்டது. இதில் ராஜேந்திரனும் கமலமும்கூட சேர்ந்து கொண்டார்கள்.

அப்போது ராகவ் சொன்னான், பெற்றோரே, மாமா, மாமி, நாங்கள் லண்டன் போனாலும் இப்போது ஸ்கைப் இருக்கிறது அதில் மூன்று நாட்களுக்கொரு முறை உங்கள் அனைவரோடும் நேரில் பேசுவது போல் பேசுவோம். அது மட்டுமல்ல ஆண்டுக்கு ஒரு முறை 15 நாட்கள் விடுமுறையில் வருவோம். உங்களையும் அடுத்த ஆண்டு அங்கு அழைத்துச் சென்று சுற்றிக் காட்ட ஆசையிருக்கிறது. அதனால் யாருக்கும் வருத்தம் வேண்டாம்.

மாமாவும் மாமியும் வந்த நேரம் எங்களுக்கும் நல்ல சான்ஸ் வந்தது. அவர்களும் இனி அன்பில் நனைவார்கள்.

எல்லோரும் சேர்ந்து சிரிக்க அங்கே மகிழ்ச்சி அலைகள் விளையாடின. ■



# கனா கண்டேன்

ஏழுபிறவியின் எட்டாம் பிறவியாய்
தேவதையின் சிறகு விரித்து....

பாதி இரவில்
கனவின் ரகசியத்துள் நுழைந்து
கடவுள் செய்து....

கற்பனை நெய்து
சலனங்கள் துறந்து
சடுதியில் உருமாற்றி...

சருகுப்பூக்களை
சாயமிட்ட நேசத்தில்
விண்மீனாய் விழி விரித்து....

ஆழ்மனதில் புதைத்து
ஆகாசம் நுழைகிறேன்
ஆயுள் மீட்கும் ஆணவியாய்...

**லீலா லோகநாதன்**

# வழி மறந்த பயணங்கள்

வழியை மறந்த பயணங்கள்
வாழ்வைத் தொலைத்தச் சோகங்கள்
பழிகள் போடும் உலகத்தில்
பசுமை தேடும் உறவுகளாம்.
விழியாய்ப் பெண்டிர் போற்றுதலும்
விதந்தே அவரைக் காத்திடலும்
அழியாப் பயணச் சிறப்பன்றோ
ஆளப் பிறந்தார் மகளிரன்றோ!!

பயணம் தன்னில் மாற்றங்கள்
பாதை எங்கும் துன்பங்கள்
தயக்கம் நிறைந்த இச்சகத்தில்
தளரும் நிலைதான் நிரந்தரமோ
முயற்சி செய்ய வழியில்லை
முள்ளாய்க் குத்தும் வழித்தடங்கள்
மயக்கம் வேண்டாம் வெல்வதற்கே
மாதர் கையில் செங்கோலே!!!

மறந்த வழிகள் காலடிகள்
மண்ணில் பதித்தத் தடயங்கள்
சிறந்த பாதை தேர்ந்தெடுங்கள்
சீர்மை வாழ்வைப் பெற்றிடுங்கள்
உறவும் உணர்வும் சேர்ந்தாலே
உண்மை நேசம் பெண்களினால்
பிறந்த இடத்தில் உருவாகும்
பிழைகள் யாவும் பொறுத்தருள்க!!!

தூங்கிக் கிடந்தால் பயணத்தில்
தூக்கம் ஒன்றே நிலையாகும்
ஏங்கித் தவித்தால் ஏமாற்றம்
ஏழை என்றே முத்திரையும்
தாங்கி நிற்க வேண்டுமன்றோ
தரணி முழுதும் துயரமன்றோ
ஓங்கி உயர மறக்காதீர்
ஓயா துழைப்பை நம்பிடுங்கள்!!

சோம்பிக் கிடந்தால் சுகம்வருமா
சொந்தம் நம்மை மதித்திடுமா
ஓம்பும் உலகில் பெண்டிர்க்கும்
ஓதும் நெறியும் இஃதன்றோ.
தாம்புக் கயிறும் வேண்டாமே
தாவி வழியைப் பற்றிடுங்கள்
பாம்பும் குறுக்கே வந்திடலாம்
பயணம் மறத்தல் கூடாதே!!!

வஞ்சம் வாழ்வில் பலவுண்டு
வழியை மறந்த பயணத்தில்
பஞ்சும் நெருப்பும் பற்றுதல்போல்
பாரில் துன்பம் பற்றிடவே
தஞ்சம் புகவே வழியின்றி
தவிக்கும் மகளிர் சமுதாயம்
அஞ்சி நில்லா நிலைவருமே
அழிவும் நெருங்கா தெளிவீரே!!!

பைந்தமிழ்ப் பாமணி . சரஸ்வதி பாஸ்கரன்
திருச்சி

# லிமரைக்கூ



1
ஆன்மீக வழியைத் தேடு
துன்பத்திற்கு வடிகால் தானாகக் கிடைக்கும்
தினமும் இறைவனை நாடு

2
பால் கொடுக்கும் தாய்
பசித்த வயிறு பாதியே நிறையும்
அழுகை நிறுத்தும் சேய்

3
மணலில் தோண்டிய பள்ளம்
மீண்டும் ஆற்றில் மீறியே ஓடும்
மழையில் பெருகிய வெள்ளம்

4
கொடியில் பூத்தது முல்லை
வாசல் முழுவதும் வாசம் வீசும்
வண்டின் ஓயாத தொல்லை

5
மலையில் கொட்டும் அருவி
மூலிகையும் கலந்து மருந்தாய் வரும்
குளித்து மகிழும் குருவி

6
கட்டிலில் வெற்றிலை பாக்கு
அவளிடம் கொடுத்தான் ஆசையோடு அவன்
போட்டு சிவந்தது நாக்கு

7
காந்தமாய் கவரும் அழகு
காலத்தில் அவளிடம் கருத்தைக் கூறு
காதல் வந்தால் பழகு

8
உழவனின் நிற்காத கண்ணீர்
வாய்க்கால் வற்றி வயல்கள் காயும்
மழை பெய்தால் தண்ணீர்

9
வாழ்வின் நெறியைக் காட்டு
குழந்தை நலமாய் கொஞ்சி விளையாடும்
சத்தான உணவை ஊட்டு

10
வண்டியை நிறுத்தி நில்
சாமி ஊர்வலம் கடந்து போகட்டும்
மெல்ல ஓரமாகச் செல்

11
கோவிலில் யாசிக்கும் குருடன்
தட்டில் சில்லறைகள் தாராளமாக விழுந்தன
தெரியாமல் எடுக்கும் திருடன்

12
சித்தர்கள் கட்டிய மடம்
ஜீவசமாதிகள் நிறைந்து ஆத்மசக்தி வழியும்
பக்தர்கள் வணங்கும் இடம்

13
இளமை வாழ்வே இனிமை
மனமோ புரியாமல் மயங்கித் தவிக்கும்
முதுமையில் கொடுமை தனிமை

14
கோபுரத்தில் மிளிரும் கலை
காண்பவரை கவர்ந்து கட்டி இழுக்கும்
சிற்பி செதுக்கிய சிலை

15
வெற்றிப் படிகளில் ஏறு
வாழ்க்கை முன்னேறி வளமாய் மாறும்
மூட நம்பிக்கையை மீறு

**கவிஞர் கவி நிலா மோகன்**
தஞ்சாவூர்

சிற்பியின்
வியர்வையில் நனைகிறது
கடவுள் சிலை

மகிழ்நிலாவின் தந்தை

# புன்னகையெனும் பொன்னகை

## கவிப்பொய்கை ஜவ்சன் அஹமட்

உலக மாந்தர்கள் ஒருவருக் கொருவர் தம்மிடையே பரிசளிக்கும் மிகப் பெரிய பொக்கிஷம் புன்னகை.உலகில் இறைவன் படைத்த எந்த ஒரு படைப்புக் கும் கொடுக்காது மனிதர் களுக்கு மட்டும் வரப்பிரசாதமாய் கொடுத்தது இந்த புன்னகையைதான்.

மனிதன் எளிதில் மற்றவனுக்கு பரிசளிக்கும் ஒரு உன்னதமான வெளிப் பாடு புன்னகையாக தான் இருக்க முடியும். எவ்வளவு மன உளைச்சல்கள் கோபங்கள் மனக்கசப்புகள் இருந்தாலும், சிலருடைய புன்னகை அது அத்தனையும் மறக்கடிக்கச் செய்து இரக்க மனம் உள்ளவர்களாகப் பலரை மாற்றியமைக்கிறது. புன்னகை தொடர்பாக நிபுணர்கள் பல கருத்துக்களை முன்வைக்கிறார்கள். புன்னகை செய்வதன் வாயிலாக மனஅமைதியும் தெளிவான சிந்தனையோட்டமும் கிடைக்கிறது.

மனித உள்ளங்கள் ஓர்நிலைப் படுவதற்கு புன்னகை பெரும் பங்கினை வகிக்கிறது. மேலும் அமைதிக்கு உண் டான சகல பயிற்சிகளையும் விட புன்னகை அவைகளை மிஞ்சி செயற் படுகிறது.

புன்னகை எவ்வளவு சிரமத்தில் சிக்குண்ட ஒருவரையும் எளிதில் மாற்றி அமைத்து அவருக்கான மன அழுத்தத்தை குறைக்க உதவுகிறது.

உலகிலுள்ள எந்த மருத்துவ ராலும் அதேபோன்று எந்த மருந்தாலும் தர முடியாது பல நன்மைகளை இந்த புன்னகையால் மட்டும்தான் கொடுக்க முடிகிறது.

"துன்பத்திலும் புன்னகை செய்யுங்கள்" என்று எம் முன்னோர்கள் சொல்லி கேள்விப்பட்டதுண்டு. இதனூ டாக நாம் எப்போதும் புன்னகைப்பவர் களாக மட்டுமே இருக்க வேண்டும்.

எம்முடைய உள்ளமானது அனு தினமும் எமது உணர்வுகளான கோபம், மகிழ்ச்சி, சந்தோசம் அன்பு இவைகளை வெளிகாட்டிக் கொண்டே தான் இருக்கிறது.

கோபமாக இருந்தாலும் சரி சந்தோசமாக இருந்தாலும் சரி அவற்றை எங்களுடைய முகங்கள் பிறருக்கு காட்டிக் கொடுத்து விடுகிறது. இன்னும் எமது செயற் பாடுகளும் அதற்கேற்றவாறு அரங்கேற்றப் படுகிறது.

எந்த நிலையிலும் எமது வெளிப் பாடு புன்னகையாக இருக்குமானால், பல முரண்பாடுகளுக்கும் மனக்கசப்புகளுக்கும் நிச்சயமாக முற்றுப் புள்ளி வைக்க முடியும்.

நான் சொல்கிறேன் எவருடைய உள்ளத்தில் அழுக்குகள் இல்லையோ எவர் பொறாமை, வஞ்சகம் போன்ற கெட்ட குணங்களற்ற தூய்மையானவராக இருக்கிறாரோ அவரால் மட்டுமே புன்னகைக்க முடியும்.

இன்று எம்மிடையே எம் சமூகம் புன்சிரிப்பு உள்ளவர்களை அதிகம் நேசிக்கி றது, அவர்களுக்கான அங்கீகாரத்தை வெளி உலகிற்கு பறை சாற்றுகிறது.

விடாப்பிடியாக அதிகம் கோபத்தை வெளிக்காட்டுகின்ற பலரை இன்று எம் சமூகம் சிடு மூஞ்சிக்காரன்,

மூர்க்கன், கோபக்காரன் போன்ற பல புனைப் பெயர்களை சூட்டி சமூகத்தில் வரையறுத்து வைத்திருக்கிறது.

புன்சிரிப்பும் மலர்ந்த முகமும் இன்று எம்மிடையே அளவீட்டுக் கருவி களாகவே காணப்படுகிறது.

நாம் அதிகம் நேசிப்பவர்களான பெற்றோர்கள், மனைவி பிள்ளைகள், நண்பர்கள் என்றும் புன்சிரிப்புடன் சந்தோசமாக இருப்பதையே நாம் விரும்பு கிறோம். இது மகிழ்ச்சிகரமான வாழ்விற்கு வழிவகுக்கிறது.

புன்னகை செய்வதற்கு எந்தவித கருவிகளோ செயற்பாடுகளோ தாக்கம் செலுத்த தேவையில்லை. உதாரணமாக வீதியில் விளையாடும் ஒரு சிறு பிள்ளையை பார்த்து எமது முகங்கள் புன்முறுவல் செய்கிறது இது ஒரு இயற்கையே., எமக்குத் தெரிந்த ஒருவரை நீண்ட நாட்களுக்குப்பின் சந்திக்கின்ற நேரத்தில் முகம் மலர்ந்து புன்முறுவல் செய்கிறோம், பௌர்ணமி தினத்தில் முழு நிலவை வானில் பார்த்ததும் எமது முகங்கள் மலர்ந்து புன்முறுவல் செய்கிறோம்.

ஆனால் இவைகள் அனைத்தும் நகைச்சுவைக்குள் அடங்காதவை இருந்தும் கூட நாங்கள் புன்முறுவல் செய்ய தவறுவது கிடையாது.

குடும்ப உறுப்பினர்கள், நண்பர் கள், அலுவலகத்தின் சக ஊழியர்கள் உள்ளிட்டோரிடம் மகிழ்ச்சியாகப் பழகு வதன் மூலமாக புன்னகை புரிவதை நமக்குள் கொண்டு வந்துவிடமுடியும். நாம் புன்னகை புரிவதால் நமக்கு மட்டும் அதன் பலன் கிடைக்காமல் நம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கும் கிடைக்கிறது.

ஆகவே கவலைகளை விட்டு புன்னகைப்பவர்களாக மாறுவோம்.
அன்றாடம் எம்மை விட்டு கடந்து போகும் எமது நொடிகளை சந்தோஷமானதாக கடத்துவோம்.



# மருத்துவக் குறிப்புகள்

* சாப்பிடும் போது விக்கல் ஏற் பட்டாலோ அல்லது சாப்பிட்ட உணவு தொண்டையில் அடைத்து இறங்காமல் சிரமப்பட்டாலோ, மூச்சுத் திணறல் ஏற்பட்டு உயிருக்கே ஆபத்து ஏற்படலாம். இதைத் தவிர்க்க,அந்த சமயத்தில் 30-45 செக்கன்கள் நன்றாக மூச்சை உள்ளிழுத்துக் கொண்டால் அடைப் பட்ட உணவு உடன் இறங்கி விடும். விக்கலும் நின்று விடும்.

* அனேகமானவர்களுக்கு காலில் தசைப் பிடிப்பு ஏற்படுவதுண்டு. இதற்கு ஒருதுளி உப்பை நாக்கி லிட்டு சுவைத்தால், உயிர் போகும் இவ்வலி நொடியில் நீங்கும்

* சிலருக்கு திடீரென தலைசுற்றல் ஏற்படும். அரை தேக்கரண்டி சர்க் கரையை வாயிலிட்டால் நொடியில் இப்பிரச்சினை தீரும்.

**டொக்டர் K. முஹமட்**
மகியங்கன



# வறுமையின் பசி

தீநுண்மி தீண்டலில் சுட்டெரித்த உடலிலும்
தீராப் பசிப்பிணி எரித்தயுயிர் ஏராளம்
திக்கெட்டும் இயல்பு வாழ்க்கை முடங்கவே
திரண்ட மக்களோடு மாக்களுந்தான் வாடின...

வேலையின்றி வீடடைந்த வேளையில் கல்விச்
சாலையீந்த சத்துணவிலும் சங்கடங்கள் சூழ்ந்தது
உலை கொதிக்கின்ற நீர்க்குமிழிப் போலவே
கொலைப் பசியாலே வயிறெல்லாம் எறிந்தன...

வருமானம் வருவழிகள் அடைந்ததால் உற்றதொரு
பெருஞ்சேமிப்பு திறமெல்லாம் தடயமின்றி போனது
அருகிலிருந்த அடிசிலால் உயிர்கள் உதரம்
சுருங்கி இறையளித்த விதிகடிந்து கொண்டன

தாய் மாண்ட சேதியறியாமல் கரமிரண்டால்
சேயிழுத்த கையறு நிலையிங்கே சூழ்ந்தது
நாய் சடலமுண்டு பசிதீர்க்கும் பஞ்சத்தால்
காயங்காக்கும் வழியின்றி பல்லுயிரும் மாண்டன

சிரமுயர்த்தி போதிக்கும் ஆசானும் பனை
மரமேறி பிழைப்பு நடத்தும் நிலையானது
இரப்போர்க்கு இரவல் வழங்குவதில் முரண்பட்ட
ஈரமில்லா மிருகங்கள் மட்டுமிதில் தப்பின

**விருதை சசி**
விருதுநகர்.



# மலர்கள் தீட்டிய வரைவுகள்

**( தன்முனைக் கவிதைகள் )**



"மங்கையராய்ப் பிறப்பதற்கே –நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா"

என்ற கவிமணியின் வரிகளுக்கு ஏற்ப மங்கையர் மலர்களால் தீட்டப்பெற்ற 'மலர்கள் தீட்டிய வரைவுகள்' என்னும் தன்முனை கவிதை நூல் சிறப்பானதொரு வரவேற்கத்தக்க அனைவராலும் விரும்பக்கூடிய ஒரு நூலாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. இந்நூல் மிகச் சிறப்பான நிலையில் அதிக அளவில் தன்முனைக் கவிஞர்களை உருவாக்க ஒரு தூண்டுகோலாக அமையும். ஏனெனில் இந்நூல் என்னையும் தன்முனை கவிதைகளை எழுத தூண்டிவிட்டது. அதனால்தான் நான் இங்கே கவிதை படைத்திருக்கும் 23 படைப்பாளர்களின் பெண்கள் பற்றிய கவிதைக்கு மட்டும் ஒவ்வொருவருக்கும் ஒரு கவிதையாக படைத்துள்ளேன். அனைவரின் கவிதை வரிகளையும் பார்க்கும் போது என்னுள் ஒரு மாற்றம் நிகழ்கின்றது.

எதையோ நினைத்து
இயங்கிக் கொண்டிருந்தேன்
என்னை எழுது என்றது
மலர்கள் தீட்டிய வரைவுகள்

இந்நூல் மிக குறுகிய காலத்தில் வந்திருந்தாலும் நிறைவாக மற்றும் செம்மையான முறையில் மிகவும் அழகான நூலாக வெளிவந்துள்ளது. இந்நூலில் நான்கு விதமான தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது. அவை மகளிர், இயற்கை, சமூகம், உணர்வுகள் என்பது. என்னைப் பொறுத்தவரை ஏன் இந்த

தலைப்பு என்றால் மகளிர் இயற்கையாகவே சமூகத்தில் தங்கள் உணர்வுகளை தன்னுள் மறைத்துக் கொண்டும் பிறர் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்தும் வாழ்பவள் என்பதால் இத்தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கலாம் என்று எண்ணுகிறேன். இனி படைப்பாளர்கள் பற்றி,

பெண்கள்

- பிரவந்திகா

பிரவந்திகாவின் தமிழ் பேசும் ஆசையும் குழந்தையின் மீது ஆச்சியின் பாசமும் கவிதையில் வெளிப்படுகிறது. இக்குழந்தை வீட்டில் நடக்கும் எதார்த்த சூழலை கவிதையாக படைத்திருப்பது சாலச் சிறந்தது.

குழந்தையைப் பற்றி

அம்மாவிடம் அன்பு
ஆச்சியிடம் உரிமை
ஆசிரியரிடம் பற்று
அழகு செல்லக்குட்டிக்கு.
- அமலஜெயந்தி

அமலஜெயந்தி அவர்களின் எதிர்ப்பார்ப்பும் ஆதங்கமும் சரியானதே.

சமையலறை ஆனாலும்
சங்கடம்தரும் அறையானாலும்
சாதித்துக் காட்டும்
சாதனை பெண்கள்

என்று மகளின் எதிர்காலத்தை நினைக்கும் அம்மா, பெண் சிசுகொலை, முதியோர்களின் கவலை, சாதனை பெண்களாய் புதுமை பெண்கள் என பெண்களின் ஒவ்வொரு நிலையையும் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

- க.அய்யம்மாள்

பெற்ற பிள்ளைகளுக்கு
ஆதியும் அந்தமும் ஆனவள்
சோதியில் கலந்தாலும்
சுடர்விடும் தாய் அவள்.

என்று அன்னையர்களே அனைத்திற்கும் ஆதியென இவ்வுலகிற்கு எடுத்துக்காட்டிய க.அய்யம்மாள் அவர்கள் ஒவ்வொரு தாயின் உன்னத நிலையினை சிறப்பாகக் கூறியுள்ளார்.

- முனைவர் ஸ்ரீ.அன்பழகி ஸ்ரீதர்

கணவனின் அன்பு
அளவுக்கு அதிகமானது
காரணம் புரிந்தது
இன்றுடன் கடைசி நாளென்று

இன்று பல பெண்களின் நிலை, ஆண்களுக்கு பெண்களின் மீது ஏற்படும் சந்தேகத்தினால்

பல பெண்கள் நெருப்புக்கு
இரையாகின்றனர் என்பதையும்
பெண்களின் மௌனத்தில்
பல புதையல்கள் புதைந்து
கொண்டிருப்பதையும் தெளிவாக
கூறியுள்ளார்.

- ஆனந்தி

அன்புடன் ஆனந்தியின்
அழகிய வரிகள்
உலகை ஆளும் மகளிர்க்கு
நம்பிக்கையூட்டும் வரிகள்

பெண்களுக்கு தைரியத்தையும்
தன்னம்பிக்கையும் நிமிர்ந்த
நன்னடை நேர்கொண்ட
பார்வையும், இல்லறம் சிறந்திட
மகளிர் உள்ளளவும் மகிழ
வேண்டும் என்று சிறந்த வரிகளை
பெண்களுக்காகவும் பெண்களின்
முன்னேற்றத்திற்காக தந்திருப்பது
சிறப்புக்குரியது.

- கலாராணி லோகநாதன்

பொறுமை குணமும்
தாய்மை குணமும் கொண்டவள்
தரணியில் பெருமை பெற்று
குடும்பத்தை ஆள பிறந்தவள்

என்று இல்லறம் நடத்த
பொறுமைகுணம் கருணைமனம்
தேவை என்றும் ஒவ்வொரு
பெண்ணும் தன்குடும்பத்தை
காப்பதில் தெய்வமாகவும்
அன்பினால் அனைத்தையும்
ஆள்பவளாகவும் சிறகொடிந்த
பறவையாய் இல்லாமல் துணிந்து
பறந்திட வேண்டும் என்று
கலாராணி லோகநாதன் அவர்கள்
குறிப்பிடும் இந்த ஊக்குவிப்பு
உண்மையில் பெண்களுக்கு
ஊக்கசக்தியாக இருக்கும்.

- கலையரசி அன்பழகன்

கணவனை தலையில்
சுமக்கும் நளாயினியும்
கயவனை காலால்
உதைக்கும் காளியும் பெண்களே!

என்று சித்தம் செழிக்க வைப்பதில்
சிங்கார பெண்ணாகவும்
அன்புக்கு அடிபணிபவளாகவும்
அதிகாரத்திற்கு
அடங்காதவளாகவும் இருப்பவள்
பெண் என்பதை கலையரசி
அன்பழகன் மிகவும் தெளிவாக
தன்னுடைய கவிதையில்
தந்துள்ளார்.

- காரை. இரா.மேகலா

பெண்களின் சுதந்திரத்தைப்
பற்றியும் பெண் குழந்தைகளின்
பாதுகாப்புக்கு ஆண்
குழந்தைகள் நெறியோடு
வளர்க்க படவேண்டும் என்று
பெண்களுக்கு இன்னும் விடுதலை
இல்லையென்றும் பெண்கள்
வேலைக்கு செல்வதால் அவர்கள்
மதிக்கப்படுகிறார்கள் என்றும்
இரா.மேகலா அவர்கள் மிகச்

சிறப்பாக தன் கருத்துகளை
தந்திருக்கிறார்கள்.

ஆண் குழந்தையின்
அழகான வளர்ப்பு
பெண் குழந்தைக்கு
என்றுமே சிறப்பு
என்பதை உணர்த்துகிறது.
சாரதா.க. சந்தோஷ்
மேலிருந்து கீழ்வரை
அவன் உற்றுப்பார்த்தான்
சேலையின் ஓட்டையில்
உடல் தெரியாத என்று

பெண்களின் உணர்வுகள்
பற்றியும் பெண்களுக்கு எதிராக
ஏற்படும் வன்புணர்வை
தவிர்ப்பது பற்றியும் பெண்களின்
திறமைகள் சமையலறை
முதல் சரித்திரங்களின்
வரை பெண்களின் நிலை
உயரவேண்டும் என்பது சாரதா.
க. சந்தோஷ் அவர்களின்
எண்ணத்தை நமக்கு
எடுத்துக்காட்டியுள்ளார்.

- சிவகாமசுந்தரி நாகமணி

பூக்களை கூட
முகர மறுக்கிறேன்
வாசம் மறைந்துவிடும்
என்று கைம்பெண்

என்று பெண் சிசுகொலை
பற்றியும் கைம்பெண்களின்
நிலை பற்றியும் சமையலறையில்
அம்மாக்களின் நிலை பற்றியும்
புதுயுகம் படைப்பவள் பெண்
என்றும் பெண்களின் ஒவ்வொரு
படிநிலையும் படம்பிடித்து
காட்டியுள்ளார் சிவகாமி சுந்தரி
நாகமணி அவர்கள்.

- நிர்மலா சிவராசசிங்கம்

பெண்களின் கனவுகள்
இன்னும் நினைவாகவில்லை
அதிகாரம் நிறைந்த
ஆண்களின் முன்னிலையில்

என்று விடுதலை நாட்டில்
விடுதலை இல்லாமல்
தவிக்கும் பெண்கள் பற்றியும்
ஆண்களின் கரத்தை பற்றும்
போது பெண்களின் கனவுகள்
வீணாகிறது என்றும் ஒரு
சில பெண்களின் நிலையை
எடுத்துக்காட்டியுள்ளார் நிர்மலா
சிவராச சிங்கம் அவர்கள்.

- நெல்லை.க. சோமசுந்தரி

சிரித்த முகங்களோடு
வீட்டை அலங்கரிக்கின்றனர்
பட்டு கட்டிய
சுட்டிப் பெண்கள்

என்று பெண்களின் சமத்தும்
பற்றியும் குட்டிப்பெண்
தேவதைகள் பற்றியும் வலிகளை
உள்வாங்கிய பெண்ணியத்தின்
பக்கங்கள் பற்றியும் நெல்லை.
க.சோமசுந்தரி அவர்களின்
வரிகளின் சிறப்பு.

- செ.புனிதஜோதி

துரத்தி வரும்
மிரட்டல் காரன்
விரட்டி அடிக்கும்
வீர மங்கை

என்று, பெண் என்பவள் தன் குடும்பத்திற்காக தன்னையே அடமானம் வைப்பதையும், ஒற்றை உருவில் பல சக்தியாய் அவதாரம் எடுப்பதையும் துரத்தி வரும் துன்பத்தை விரட்டி அடிக்கும் வீரப்பெண்களாகவும் இருக்கின்றாள் என்பதை புனிதஜோதி அவாகள் சிறப்பாக கவிதை தந்திருக்கிறார்.

- மகேஸ்வரி கிருஷ்ணசாமி

உதிரம் சிந்தி
உயிரைப் பெற்றெடுப்பவள்
விழுதாய் இருந்து
வீட்டைக் காப்பவள்

எத்தனை துன்பங்களையும் தன் புன்சிரிப்பால் உலகாள்பவள் பெண் என்றும் பெண்கள் குடும்பத்தை சிறப்பாக நடத்துபவள் என்றும் ஆணிவேராக இருந்து அன்பால் குடும்பத்தை காப்பவள் என்றும் பெண்களின் குடும்பக் கடமைகள் பற்றியும் மகேஸ்வரி கிருஷ்ணசாமி அவர்களின் வரிகள் ஒவ்வொரு குடும்பப் பெண்களுக்கும் உற்சாகமூட்டக் கூடியதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

- ரம்யா (பாண்டிச்சேரி)

பழுதையும் பஞ்சாமிர்தமாய்
எண்ணிக் கொண்டாள்
ருசித்து சாப்பிடாமல்
பசித்து சாப்பிடுகையில்

என்று வேலைக்கு செல்லும் இல்லத்தரசிகள் பற்றியும் மற்றும் குழந்தைகளுக்கு  நடக்கும் வன்கொடுமைகள்  பற்றியும் பிறந்த வீட்டில் இருக்கும் மகிழ்ச்சி வேறு எங்கு தேடியும் கிடைக்கவில்லை என்றும் மிக அழகாக கவிதை படைத்துள்ளார் கவிஞர் ரம்யா அவர்கள்.

- ராதாமணி

எதையும் தாங்கும்
சக்தி உன்னில் உள்ளது
பெண்ணே உன்பார்வையில்
எரிமலையும் சிதறிப்போகும்.

என்று பெண்மையைப் போற்றி பெண்மைக்கு எதையும் தாங்கும் சக்தி உண்டு என்பதையும் அவர்களுக்கு ஊக்கமூட்டக்கூடிய அளவில் உற்சாக வரிகளையும் அள்ளித் தந்த ராதாமணி அவர்கள் பெண்கள் சாதனை புரிய வந்தவள் என்று பெண்களின் எண்ணங்களுக்கு தங்கள் கவிதைகள் மூலம்

வலுசேர்த்திருக்கிறார்.

- ராஜிலா ரிஜ்வான்

அம்மாவின் வாயும்
அசை போடுகிறது
அம்புலியை காட்டி
சோறூட்டுகையில்

என்று எத்தனை பேர் வந்தாலும் அன்னைக்கு ஈடாகமாட்டார்கள் விட்டுக்கொடுப்பதால் பெண்களே முன்னிலையில் உள்ளனர் என்பதை முன்னிறுத்தி கவிதை படைத்துள்ளார்.

- ரேணுகா ஸ்டாலின்

சரித்திர பட்டியலில்
சாதனை படைக்கின்றனர்
சகித்து கொண்டு
வாழும் பெண்கள்

என்று சாதனை படைக்கும் பெண்கள் பற்றியும், மெழுகாய் உருகும் மங்கையர் பற்றியும் தியாகம் செய்வதில் கற்பகத்தரு பெண்கள் என்றும் பெண்களின் பெருமையை மிகச்சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளார் ரேணுகா ஸ்டாலின்

- லஷ்மி கார்த்திகேயன்

மகனின் கண்டிப்புக்கு பிழை
செய்யும் அம்மா புகுந்த
வீட்டின் குலவிளக்காகவும்
தேவதையாகவும் வாழ்பவள்
பெண்கள் என்று குடும்ப பெண்களின் நிலையை சூட்சுமமாக சுட்டிக்காட்டியுள்ளார் லஷ்மி கார்த்திகேயன் அவர்கள்.

- விஜயகல்யாணி

எப்பொழுதும் கண்கள்
உன்னையே நோக்குகின்றன
கோபமாககூட என்னை
பார்க்க மாட்டாயா என.

என்று விஜயகல்யாணி அவர்கள் பெண்கள் எதிர்பார்க்கும் ஒவ்வொரு விஷயத்தையும், எதையும் தாங்கிக் கொண்டு வாழும் குடும்பபெண்ணாகவும் இருப்பவள் பெண் என்பதை சுட்டிக்காட்டியுள்ளது சிறப்புக்குரியது.

- ஷர்ஜிலா யாகூப்

இந்த பருவம்
இப்படியே நிலைக்க வேண்டும்
தாயின்மடியில் தலைசாய்த்து
உறங்கும் பெண்

பொட்டு வைத்த விதவைப் பெண்களின் ஆயிரம் விமர்சனங்கள் பற்றியும் மீண்டும் மழலைப்பருவம் வேண்டும் பெண்கள் பற்றியும் ஷர்ஜிலா யாகூப் அவர்கள் பெண்களின் நிலையை தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளார்.

- ஜோதி சரண்

மஞ்சள் நாணால்
மாட்டிக் கொண்டன
கூண்டில்  அடைக்கப்பட்ட
பெண் குயில்கள்

என்று பெண் வீரம் விவேகம் சாதுர்யம் உள்ளவளாகவும் மஞ்சள் கயிற்றில் மங்கிப் போகும் வாழ்வு கூண்டில் அடைப்பட்ட குயில்களாகவும் பெண்களுக்கு ஏற்படும் தடைகற்களுக்கு எதிராக கல்விக்குடையினை விரிப்போம் என்று சோதி சரண் குறிப்பிட்டிருப்பது சிறப்புக்குரியது.

- அன்புச்செல்வி சுப்புராஜு

தேடும் இடமெங்கும்
அதிகாரம் நிறைந்திருக்கிறது
அகிலத்தை ஆளுகின்ற
அழகிய பெண்மைக்கு

இல்லம் முதல் இருக்கும் இடம் எங்கும் பெண்களின் நிலைகளை அழகாக எடுத்துகாட்டிய அன்புச்செல்வி அம்மா அவர்களின் கருத்துகள் யாவும் சிறப்பு.

அன்பும் அழகும்
அடிமை கொள்ள செய்கிறது
ஆனந்த சிரிப்புடன்
அம்மாவாக இருப்பதால்

இயற்கை பற்றியும் இயற்கையின் சீரழிவால் பறவைகளின் நிலை பற்றியும் சமூகத்தில் இன்றும் பல மனிதர்கள் தங்களின் நிலை தாழ்ந்தே காணப்படுவதையும், மனிதனின் அகஉணர்வுகளையும் சித்தரித்து காட்டிய அன்புச்செல்வி அம்மாவின் கவிதை வரிகள் என்னை மீண்டும் மீண்டும் தன்முனை கவிதைகளை எழுததூண்டுகிறது.

### இயற்கை

பலத்த காற்று மழையால் நடுங்கும் செடி, எண்ணுவதற்குள் ஒளிந்து கொள்ளும் வானவில், ஊர்ந்தபடி செல்லும் மேகக்கூட்டங்கள், எவ்வளவு தடுத்தும் மேல் நோக்கி வளரும் மரம், காற்றின் அசைவில் தழுவிடும் தென்றல், பௌர்ணமி நிலவு, அருவியின் ஆனந்த கீதம், விதைக்காமல் முளைத்திடும் மண், தேனின் உயிர் துடிப்பு, கதிரவனின் காட்சி, சிறகடிக்கும் பட்டாம்பூச்சி, பசுமையாய் வளரும் பயிர்கள், அழகாய் மலரும் மலர்கள் அமாவாசை இரவும் அழகு, விண்மீண் கூட்டங்கள்  வலசை போகும் பறவைகள், இவை யாவும் ஐம்பூதங்களின் அரவணைப்பில் வாழும் என்று அடுக்கிக் கொண்டே சென்றுள்ளனர் அனைத்து படைப்பாளர்களும். இயற்கையில் ஒவ்வொருவருக்கும் ஒரு எண்ணம் அவை அனைத்தும் பல வண்ணம் என்று இங்கே நிருபித்துக் காட்டியுள்ளனர்.

சமூகம்

இன்றைய சமூகத்தில் நடக்கும் பொறுப்பற்ற தனத்தையும் அதனால் மக்களுக்கு விளைவையும் மிக அழகாக இந்நூலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தண்ணீரை வீணாக்கும் தண்ணீர் லாரி, ஆசிரியரை ஏமாற்றி நடக்கும் இணையவழி வகுப்பு, சிதைந்த போன நாட்டின் பொருளாதாரம், பகிர்ந்து உண்ணும் மனம் இல்லாத மனிதர்கள், குடித்துவிட்டு அலையும் குடும்பத் தலைவர்கள், விடியலைநோக்கி விழித்து கொண்டிருக்கும் மனிதர்கள், கருணையற்ற மனிதர்கள், குடிக்கும் நீருக்கும், மூச்சுவிடவும் திணறும் மக்கள், நாட்டில் நடக்கும் ஊழல் அழிந்து கொண்டிருக்கும் மனிதம் என்று சமூகத்தின் நிலைகளை பல்வேறு கோணங்களில் படம்பிடித்து காட்டியுள்ளனர் படைப்பாளர்கள்.

உணர்வுகள்

விலங்குகளிடமும் உணர்வுகளை சுட்டிக்காட்டிய பண்பு, தாய்மை என்பது எல்லா உயிர்களிடமும் சமம் என்பதை சொல்லிய பாங்கும், மனித மனங்கள் பற்றியும், கல்லூரி காலத்தின் முதல் காதல் பற்றியும், அப்பாவின் இழப்பால் வாழ்வே வெறுமை என்பதையும், மருமகளை நல்ல முறையில் வாழவிட்டிருந்தால்

# இணையவழி கல்வி

பூமிக்கு மலர் போல
வானுக்கு தாரகை போல
மானிடனுக்கு கல்வியும்
அழகான அடையாளம்

நடைமுறையில் கொரோனா
நடுவழியில் கல்வியும்
திக்கற்று நின்றது
திகைப்பில் மாணவ சமுகம்

தொழிநுட்பம் விடை பகர்ந்தது
தொலைதூர கல்வியாக
கொரோனா தந்த விடுமுறையை
கொண்டு செல்ல ஓர் வழியாக

வசதி படைத்தவனுக்கோ
வசந்த கால கல்வி
ஏழை எளியவனுக்கோ
எட்டாத கல்வி

பசி போக்கி ஒரு வேளை
பட்டினி கிடந்து இரு வேளை
பிள்ளை இணையவழியில் இணைய
பிழைப்புத்தேடி பெற்றோரும்

அப்பாவிடம் இருப்பதோ நூறு
அழைபேசி கட்டணமோ இருநூறு
பெறுமதியான கல்வியை
பெறுவது எங்கனம்?

இலவச கல்வியின்று
இணையவழியாய் மாறியது
நாமம் பொருத்தமா? "இலவசம்"
நாள்தோறும் சிந்தனையில்

வெள்ளை சீருடையின் நோக்கமின்று
வெறும் கனவாய் ஆனது
பாட புத்தகம் கூட
பாழடைந்து போனது சிலருக்கு

பணம் படைத்த தனவந்தர் பலரில்
மனம் படைத்த தனவந்தர் சிலரே
ஏழை மாணாக்கர்களுக்கு உதவ
முனைவோம்
எட்டி பிடிக்க இணையவழி கல்வியை

**பா. ஹகீமா நசீர்**
கொழும்பு

முதியோர் இல்லங்கள் காணாமல் போயிருக்கும் என்று விளக்கியிருக்கும் பாங்கும், கோபத்தில் உதிர்க்கும் வார்த்தைகள் வேதனையை தரும் என்பதையும், காதல் பிரிவு பற்றியும், அம்மாவின் கண்ணீர் அகிலத்தை அடக்கும் அப்பாவின் அதிகாரம் ஏங்க வைக்கும் என்பதையும், இதயத்தில் புதைந்த வலிகள் பற்றியும், ஆனந்தம், அழுகை இரண்டிலும் வருவது கண்ணீர் மட்டுமே என்பதையும், கிராமத்தில் நடக்கும் பழைய நினைவுகள் பற்றியும், அனாதை இல்லத்தில் வாழும் சிறுமிகள் பற்றியும், குழந்தை சொல்லும் பொய்யான உண்மை பற்றியும், பிடித்தவர்கள் இல்லாத காலம் யுகங்களாக நகர்கின்றது, பெற்ற அன்னையின் முந்தானை வாசம், உள்ளத்தில் கட்டுண்டு கிடக்கும் வலிகள் போன்ற பல்வேறு வகைப்பட்ட உணர்வுகள் இங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது மிகவும் சிறப்புக்குரிய ஒன்றாகும்.

இந்நூலை படிக்கும் போது என்மனதிற்கு நிறைவாகவே இருப்பதால் இதில் குறை கூறுவதற்கு என்று எதுவும் இல்லை. ஏனெனில் சமூகத்தில் வாழும் பெண்களின் நிலையையும் இயற்கையின் முக்கியத்துவத்தையும், சமூக நிலைமையும், உணர்வுகள் பற்றியும் மிக அழகாக சித்தரித்துக் காட்டியுள்ளனர் படைப்பாளர்கள். ஒட்டுமொத்தத்தில்

மங்கையர் தொடுத்த
கதம்ப மாலை மணக்கிறது
மக்களின் கைகளில்
மலர்கள் தீட்டிய வரைவுகள்

நன்றி வணக்கம்!

**- தமிழ்க்கண்ணகி**

## வெண்பா

குன்றான காதல் குறுஞ்செய்தி நானனுப்ப
என்தாயும் வந்தாள் எனதருகே - முன்சிரிப்பு
மின்னல்போல் வந்துவிட்டு மீண்டும் மறைத்தெழுதும்
என்னநிலை மாறுமோ ஈங்கு.

**தமிழ்நெஞ்சம் அமின்**

# குறும்பாக்கள்

## கல்லறை

எழுத்தில்லா வெறும் காகிதமென்று, தூக்கியெறிந்துவிட்டாய் ,

இன்று தவறுணர்ந்து திரும்பிவிட்டாய்,

எழுத்துல்ல கருங்காகிதம்

கண்டு கதறியழுகிறாய்...!!

## சூரியன்

கதிரவன் கதவைத் தட்டும் முன்
துணையவள் வாசல்வருகிறாள்,
மலர்ந்த சூரியகாந்தியென்று வெட்கப்பட்டு
ஒளிகிறான் செந்நிறமலரவன்...!!

## நாள் எண்ணி

சிறகுகளில்லை விண்ணில் பறக்க,
படகுகளில்லை நீரில் மிதக்க தைரியமில்லை
இன்று உன் கண் பார்க்க,
தவறி விட்டேன் அன்று உன் காதலை ஏற்க ,
தவமிருக்கிறேன் என் இதயம் பிரிந்தபின் ,
காத்திருப்பேன் உன் விழிகள் காதல்பேசும் நாள் எண்ணி...!!

## தண்டனை

மாட்டிக் கொண்டேன் உன்னிதய சிறையில்,
விடுதலை வேண்டாம் ஆயுள் தண்டனை போதும்...!!

பத்மாவதி கிருஷ்ணா

# பெண்



பாவங்கள் செய்துவிட்டாய் போலும் பெண்ணாய் பிறந்துவிட்டாய்..
சாலைகளில் காமத்திற்கு பார்த்தவன் காலத்திற்கு பார்த்திருக்க கூடாதா...!
உடைகுறைத்து இடை மறைக்கவில்லை நான் இருந்தாலும் யாரோ
ஒருவனின் கண் அதன்மேலே...

அன்னை மடிபிடித்து ஏறி மார்பிடித்து பால் அருந்திய
மனமில்லையோ என்னவோ..
என் அங்கத்தில் மட்டும் அந்த பாகத்திற்கு ஏகப்பட்ட பார்வையாளர்கள்...
ஏன் பெண்ணாய் பிறந்துவிட்டாய்..
அப்பனின் ஐந்தாவது பிடி சோற்றை குறைத்துக்கொள்ளவா...

ஏன் அழகாய் பிறந்துவிட்டாய்
அம்மையின் கிழியாத நாட்டுப்புடவையை கிழித்து மறைத்து மானம் காத்திட....

ஏன் தமக்கையாய் பிறந்துவிட்டாய்
தையல் இயந்திரத்துடன் காலம் கழித்திடவா....

ஏன் தங்கையாய் பிறந்தாய்...
அண்ணன் ,அக்காளின் பாசத்தில் மூழ்கிடவா...

நடைபாதை வழிகளில் உன் நிழல்கூட கற்பழிக்கப்படும்...
பணிபுரியும் இடத்தில் தூரத்தில் உன்னை பார்ப்போரால்
மனரீதியாக பாலியலுக்கு உள்ளாவாய்...

குனிந்த நிலையில் பார்த்து நிமிர்ந்து விடு..
பாலியல் பட்டினிகள் உனைச் சூழக்கூடும்...


பேருந்து நிறுத்தங்களில் சற்று நிலையாக நிற்க மறு...
உரசல் உள்ளங்கள் உன்னைச் சூழக்கூடும்....

நமக்கு மட்டும் ஏன் இந்த சூழல் என்று
தலையணைக் குளியல்களில் புதைந்த அவள்கள் ஆங்காங்கே..

வாசலில் நிற்க..தெருமுனையில் எவனோ ஒருவனின் பார்வைகளில்
மயங்கினால் காலம் உன்னை வேறு மாதிரி கூறிவிடும்...

அதே நேரத்தில் கோபம் கொண்டு உதறித்தள்ளி உள்ளே சென்றால்
உத்தமி என்ற பட்டமோ..தற்கால பட்டயமோ உடன்வரும்....

பெற்றவருக்காக இழந்த மனங்களும் உண்டு...
பெற்றோரின் பேச்சை கேளாது விதியால்
வினைப்பயனை அனுபவித்தவரும் உண்டு...
சகிப்புத்தன்மையில் பெண்மை உண்டு...
சகல திறமைகளில் பெண்கள் உண்டு....
சாகசத்திற்கு வித்தாக பெண்கள் உண்டு..
சத்தியம் என்ற சொல்லின் பின்
பெண் மட்டும் தான் உண்டு...



பெண்ணுக்கு மனம் போதும்..
போதை நிரம்பிய பணம் வேண்டாம்...

அப்பனிடம் அன்பு போதும்
அடுத்த வீட்டிற்கு விரட்டினால் போதும்
என்ற மனப்பான்மை வேண்டாம்...

பெண்ணுக்கென்று பல சகாப்தம் உண்டு...
பெண்மையை போற்றுவோம்...
என் அன்னையாய், தமக்கையாய்..
தங்கையாய்... மனைவியாய்...
மகளாய்.... அத்தையாய்...
அத்தை மகளாய்... மாமியாராய்..
மனைவியின் தங்கையாய்.. அழகிய
கிழவியாய்...
அடுத்த வீட்டு அக்காவாய்...
பெண்மையின் இலக்கணமே! போற்றுவோம் என்றும்

**- கார்கவி**
**நாகபட்டினம்**



# இயற்கை என்னும் அட்சயப்பாத்திரம்!

பிரம்மனின் அதீத களிப்பின்
உச்சத்தின் எச்சத்தில் உருகி இறுகியது
இயற்கை என்னும்  அட்சயப் பாத்திரம்!

அனைத்துயிர்களுக்கும் பொதுவில் வைக்கப்பட்டது
அட்சயப்பாத்திரம்!
சிற்றறிவு உயிர்களை  மிதித்து
ஐந்தறிவுகளை அழுத்தி
அட்சயப்பாத்திரத்தை அபகரித்துச் செல்கிறது
சுயநல ஆறாமறிவு!

ஆவேச மதயானை காலில் சிக்கி
சின்னாபின்னமாகிறது இயற்கை வயல்வெளி!
பேராசைப் பன்றிகளின் உச்சகட்ட அகழ்தலில்
உச்சியில் பொத்தலாகிப் போனது
அட்சயப் பாத்திரம்!
அதனை ஓசோன் ஓட்டை என்கிறீர்கள்!

நிலவளசுரண்டலின் விளைவால் விளைந்த
வெற்றிடத்தை  உடலசைத்து நிரப்புகிறது நிலம்
நிலநடுக்கமென பதறுகிறது பதர்கள்!


மலையை மொட்டையடித்து வங்கிக் கணக்கில்
வழிய விடுகின்றனர் நிலக்கொள்ளையர்கள்!
நிலம் கோபத்தில்  சரியும் போது
நிலச்சரிவென பெயர் சூட்டுகிறீர்கள்!

உலகின் குப்பைகளை கடலில்
கொட்டிக்கொண்டே இருக்கிறீர்கள்
கடல் கோபத்துடன்  திருப்பி தரும்போது
ஆழி பேரலையென அலைமோதுகிறீர்கள்!
அட்சயப் பாத்திரத்தை தொலைத்துவிட்டு
பிச்சைப்பாத்திரத்துடன் அண்ணாந்துப் பார்த்து
கடவுளிடம் கையேந்தி  நிற்கிறீர்கள்
செம்பிழம்பாகிறது வானம்!

**- பா. சிவகுமார்**

# வாழ்தல் இனிது

நிஷா ரஹ்மான்



## நன்றியுணர்வு

பெரும்பாலான மக்கள் தவற விடுகின்ற முக்கியமான விஷயம் நன்றியுணர்வு.

பெரும்பாலும் மக்கள் தங்கள் கனவுகளை காட்சிப்படுத்துவதிலும், தங்கள் குறிக்கோள்களுக்கான பட்டியல் களை உருவாக்குவதிலும் மிகவும் கவனமாக இருக்கிறார்கள், அவர்கள் நன்றி மறந்து விடுகிறார்கள், நன்றியுணர்வு, ஈர்ப்புவிதியை செயல் படுத்துவதற்கான முக்கியமான திறவுகோலாகும்.

வாழ்க்கையில் நீங்கள் விரும்பு வதை வெளிப்படுத்துவதில் நன்றி யுணர்வு முக்கியமானது, ஏனெனில் இது உங்களில் அதிர்வுகளை எழுப்புகிறது. மற்றும் உங்களை பிரபஞ்சத்துடன் இணக்கமாக கொண்டுவருகிறது. உண்மை யில், நன்றியுணர்வு மிகவும் சக்தி வாய்ந்ததாக இருக்கிறது, அது உங்கள் வாழ்க்கையை மாற்ற உதவுகிறது.

உங்களுக்கு நடக்கும் எல்லா வற்றிற்கும் நீங்கள் நன்றி யுள்ளவர்களாக இருக்கும்போது, நீங்கள் சிறப்பாக வாழ்வீர்கள், நீங்கள் நேசிக்கப்படுவீர்கள், மகிழ்ச்சியாக இருப்பீர்கள். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நீங்கள் செல்வ வாழ்க்கை நிலையிலிருந்து செயல் படுகிறீர்கள்.

மறுபுறம், உங்களுக்கு நடக் கும் எல்லாவற்றிற்கும் நீங்கள் நன்றியுள்ளவர்களாக இல்லா விட்டால், நீங்கள் புகார் செய்வீர்கள், எல்லாம் தவறு என்று நீங்கள் உணருகிறீர்கள், உங்கள் கட்டணங்களை செலுத்த நீங்கள் போராடுகிறீர்கள், உங்கள் குடும்பத் தார் உங்களை ஏமாற்றுவதாக நீங்கள் உணர்கிறீர்கள். நீங்கள் பற்றாக் குறை வாழ்க்கையிலிருந்து செயல் படுகிறீர்கள்.

நன்றியுணர்வு செல்வந்தர் வாழ்க்கையை உருவாக்குகிறது, புகார் செய்வது பற்றாக்குறை வாழ்க்கையை உருவாக்குகிறது. உங்கள் வாழ்க்கை யில் நன்றியுணர்வின் அணுகுமுறை ஏன் முக்கியமானது என்பது தெரியுமா?

உங்கள் சிந்தனை அதிர்வு சக்தியை உருவாக்கும் என்பதால், நீங்கள் எதிர்மறையாக சிந்திக்கும்பொழுது, எப்போதும் புகார் செய்கிறீர்கள், குற்றம் சாட்டு கிறீர்கள் ஆகவே உங்கள் சிந்தனை ஆற்றல்

***நன்றியுணர்வு உங்கள் மனதளவில் மட்டும் இல்லாமல், செயலிலும் வெளிப்படும் போதுதான் மிக அழகாக இருக்கிறது.***

பிரபஞ்சத்துடன் ஒத்துப் போவதில்லை.

நீங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கும்போது, நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கும்போது, இப்போது உங்களிடம் உள்ள அனைத்தையும் நீங்கள் பாராட்டுகிறீர்கள், நீங்கள் பிரபஞ்சத்திற்கு ஒரு நேர்மறையான ஆற்றலை கொடுக்கிறீர்கள் ஆகவே, அதையே திரும்பவும் பெறுகிறீர்கள்..

''உங்களிடம் ஒரு கோடி ரூபாய் இருந்தும் ஒவ்வொரு நாளும் நீங்கள் ஏமாற்றமடைந்து விரக்தியடைந்தால், உங்கள் வாழ்க்கை யின் தரம் மிகவும் மோசமானதாக மாறிவிடும். இருப்பதையும் இழப்பீர்கள். ஆனால் உங்களிடம் பெரிதாக ஒன்றும் இல்லை, உங்களிடம் உள்ளதற்கு நன்றியுள்ளவர்களாக இருந்தால், நீங்கள் உலகமே வியக்கும் அளவு ஒரு பணக்காரர் ஆவீர்கள். நன்றியுணர்வு இல்லா விட்டால் உங்களுக்கு எவ்வளவு பணம் கிடைத்தும் அவை நிரந்தரமாக இருக்காது. ''

ஆகவே, நீங்கள் ஏற்கனவே இருந்த ,இருக்கின்ற, பெறவிருக்கும் எல்லாவற்றிற்கும் நீங்கள் நன்றியுள்ளவர்களாக இருப்பதை உறுதிப் படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் விரும்பும் விஷயங்களுக்கு நீங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கும் போது, அவை ஏற்கனவே உங்களுடையவை என்பதையும், அவற்றைப் பெறுவதற்கு நீங்கள் பிரபஞ்ச கதவை திறந்திருக்கிறீர்கள் என்பதையும் பிரபஞ்சத்திற்கு இது உறுதிப்படுத்துகிறது.

நன்றியுடன் உங்கள் வாழ்க்கையை வாழ நீங்கள் என்ன செய்ய முடியும் ?...

ஒவ்வொரு நாளும், நன்றியுணர்வு பட்டியலை எழுதுவதைப் பயிற்சியாக்கிக் கொள்வதன் மூலம் நீங்கள் ஆசீர்வாதங்களை பெறுகிறீர்கள்.

இது உங்கள் கார், உங்கள் நாய், உங்கள் பூனை, உங்கள் குழந்தைகள், உங்கள் மனைவி, உங்கள் வேலை, உங்கள் முதலாளி, உங்கள் வீடு, உங்கள் கணினி போன்றவை, நீங்கள் நினைக்கும் மற்றும் நன்றியுடன் இருக்கக்கூடிய எதுவாகவும் இருக்கலாம்.

நீங்கள் விரும்பியது எதுவாக இருந்தாலும் அவற்றை நீங்கள் அடைந்ததாகவும் அதற்காக நன்றியுடன் இருப்பதாக உணர்ந்து.. நன்றி கூறுங்கள். நன்றியுணர்வு மாயாஜாலம் போல மிகப்பெரிய மாற்றத்தை உங்களில் உருவாக்கும்.

"நன்றி" என்ற வார்த்தையை அடிக்கடி பயன்படுத்துங்கள். நன்றியுணர்வு ஆரோக்கியம், உறவு மேம்பாடு, செல்வம் மற்றும் மகிழ்ச்சி அனைத்துக்குமான திறவுகோல்... நன்றி சொல்லும் நெஞ்சம் நமக்கு இருந்தால் நான்கு திசைகளிலும் உறவுகள் விரியும். முயற்சி என்னும் அற்புதச் சிறகுகளிருந்தால் ஆகாயத்திற்கு அப்பாலும் அதிசயம் நிகழ்த்தலாம்!

நீங்கள் வாழும் வாழ்விற்கு ஆதாரமாக, பக்க பலமாக, உதவிக் கரமாக பலர் இருக்கின்றார்கள். மற்றவர்களின் உதவியும், ஒத்துழைப்பும் இன்றி உங்களால் வாழவே முடியாது. அவ்வாறு உங்களுக்கு உதவிக்கரமாக இருக்கும் அனைவருக்கும், உங்களது நன்றி உணர்வை வாழ்நாள் முழுவதும் தெரிவித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

வள்ளுவப் பெருந்தகையும் ''நன்றி மறப்பது நன்றன்று'' என்றார். நன்றியுணர்வோடு செயல்படும் போது உங்கள் மனம் பக்குவப்பட்ட நிலையில் பணிவோடும் தெளிவோடும் இருக்கும். உங்களுக்கு கிடைத்திருக்கும் சௌகரியங்களுக்கு நன்றியுடன் இருங்கள்

நன்றியுணர்வு உங்கள் மனதளவில் மட்டும் இல்லாமல், செயலிலும் வெளிப்படும் போதுதான் மிக அழகாக இருக்கிறது. உங்களிடம் இருப்பவைகளுக்கு மகிழ்ந்து நன்றி பாராட்டும் போது நீங்கள் நன்றி செலுத்தும் படியான நிறைய நிகழ்வுகளை உங்களிடம் ஈர்த்துக் கொள்கிறீர்கள் என்பதே உண்மை.

நன்றி உணர்வுதான் செழிப்பின் அடித்தளம். ஆகவே, உங்கள் வாழ்க்கையின், ஒவ்வொரு படித்தளங்களிலும், சிறியதோ, பெரியதோ... நீங்கள் பெற்றி ருக்கக் கூடிய அனைத்து விதமான பாக்கியங்களுக்கும் நன்றி உடையவராக வாழப்பழகிக் கொள்ளுங்கள்.

இனிது இனிது!
வாழ்தல் இனிது!

நற்சிந்தனைகள்
இனியும் தொடரும்.

# என்றன் அன்புச்சகோதரி

**(மா மா விளம்)**

வீட்டில் முதலாய் பிறந்தவள்
வீரம் சுமந்த பெண்ணவள்
தட்டில் உணவை அளிப்பவள்
தட்டிக் கேட்கத் துணிபவள்
பட்டப் படிப்பு படித்தவள்
பண்பில் பகவான் போன்றவள்
விட்டுக் கொடுத்துச் சென்றவள்
விடையாய் எனக்குத் தெரிபவள்

வழியாய் எனக்கு இருந்தவள்
வலியைப் போக்கச் செய்தவள்
மொழியாய் வந்து நிற்பவள்
முதலாய் முடிவாய் ஆனவள்
அழிவை நீக்கி மகிழ்ந்தவள்
ஆக்கச் செயலைத் தந்தவள்
தாழியால் என்னைக் காப்பவள்
தாயாய் மாறி தாங்குபவள்

பருகும் பாலைத் தந்தவள்
பசியைப் போக்கி மகிழ்ந்தவள்
இரும்பு மனுசி யானவள்
இதயத் துடிப்பாய் இருப்பவள்
விரும்பும் செயலைச் செய்தவள்
விடையாய் எனக்கு கிடைத்தவள்
கருவில் இடத்தைக் கொடுத்தவள்
கவியாய் என்றும் வாழ்பவள்!

நன்மை செய்தே மகிழ்பவள்
நலத்தைக் கொடுத்தே சென்றவள்
இன்னல் துடைக்க வந்தவள்
இனிதாய்ப் பேசி மகிழ்ந்தவள்
என்றும் என்னைக் காப்பவள்
எதிலும் முதலாய் இருப்பவள்
அன்றும் இன்றும் ஒருவளே
என்றன் அன்புச் சகோதரி!

**நா.பாண்டியராஜா.**

# மனிதத்தை விதைத்திடு

சமூகத்தின் மேல் அக்கறை கொண்டு
சாலையின் ஓரத்தில் திறந்து கிடக்கும்
சாக்கடையில் இறங்கி கழிவுகளை அகற்றி
சரீரம் முழுவதும் அழுக்கைச் சுமந்திடும்
சத்திய மனிதனை நித்தமும் வணங்கிடு...

ஆயுள் ரேகை தேய்ந்த பிறகும்
அனுதினமும் உழைத்து அகிலத்தில் உள்ளோருக்கு
உணவைக் கொடுத்துப் பசியைப் போக்கிடும்
உழவனைப் பார்த்தால் உயர்வாய்ப் போற்றிடு...

உதவிகளைக் கேட்டுக் கரங்களை நீட்டிடும்
அகதிகள் கூட்டத்திற்கு இருப்பதைத் தந்திடு...

செய்யும் தொழிலைத் தெய்வமென நினைத்துச்
சேவைப் பணிகளைத் தொடர்ந்திடும் மனங்களைக்
கண்களில் கண்டால் கர்வமின்றி மதித்திடு...

அன்பை கொடுத்து அறத்தைக் காத்து
மண்ணில் தினமும் மனிதத்தை விதைத்திடு...

**பாக்யபாரதி**
தமிழ்நாடு

---

## மழைகாலச் சிற்பங்கள்

மலையில் மழை பெய்ய
மரங்களுக்கு முத்த தூறல்கள்!
நனைந்து சிரிக்கும்
பாறைகளுக்கு வெண் கீறல்கள்:
ஒவ்வொரு உயிர்களும்
குளிரில் இணையும்,
இயற்கையின் காதலில்
குடும்பமாய் அமையும்;

மழைத்துளி செதுக்கும்
சிற்பங்கள் வளரும்,
மொட்டுகள் அனைத்தும்
மெல்ல உரசி மலரும்;
ஒவ்வொரு துளியும்
நீண்ட உறவைப் பேசும்,
மேகக் கூட்டங்கள்
என்றும் இன்னிசை வீசும்...

**வெ. ஹேமந்த் குமார்,**
ஈரோடு

# மயக்கும் மாயபிம்பங்கள்

அப்பத்தாவின் சொற்களை அலட்சியம் செய்திருந்தோம்
பச்சைகேரட் பார்வைக்கு நல்லதென்றதை

கோவிந்தன் தாத்தாவை
கேலி செய்திருந்தோம்  குங்குமத்தில் குளித்த
பீட்ரூட் குருதிக்கு சிறந்ததென்றதை
தந்தையவரின் வார்த்தைகளை தகாத வார்த்தைகளாக
காதில் வாங்கிக்கொள்ளவில்லை சின்னவெங்காயம் பெரியளவில்
உடலுக்கு உறுதியென்றதை

அம்மாக்களின்  குரலை சும்மாவும் கேட்கவில்லை
கறிவேப்பிலை கூந்தலுக்கு எருயிலையென்றதை

எல்லோரின் பேச்சையும் ஏளனம் செய்து
அயல்நாட்டு மோகத்தில் ஆர்டர் செய்த
பீசா பர்கரை தின்று பீற்றிக்கொண்டிருந்திருந்தவர்களை

அரூபமான உயிர்கொல்லி
முன்னோர்களின் சொல்லிலிருந்த
மூலத்தை உணர்த்திய கணத்தில்
மாயபிம்பங்கள் மண்ணில் உதிர்ந்தது

**- நேசமுடன் ஈசு**

---

# மாநகர  அசௌகரியம்

காரை நிறுத்தக் கூட மரத்தடி இல்லாது,
திரும்பும் திசையெங்கும்
கட்டிடங்களாய் நிரம்பியிருக்கும்
அந்த பெருநகரத்தின் பிரதான சாலையில்
குடைபிடித்தபடி பலரும் வருவதும் போவதுமாய் இருக்க,
தேநீரை உறிஞ்சியபடி கவனித்துக்கொண்டிருந்த நான்...
கடற்கரைக்கு செல்லும் சாலை வழியே நடக்கலானேன்
என் மேல் சாரலாய் அடித்துச்செல்கிறது பேருந்தொன்று
பேருந்து நிறுத்ததில் வழிந்தோட வழியின்றி நிற்கும்
தேங்கிய மழைநீர்.

**- சாயிராம். தஞ்சாவூர்**

# விடை தேடும் வினாக்கள்

தேடுகின்றேன் அமைதியினை எங்கே? எங்கே?
தினந்தினமும் மகிழ்வின்றி இங்கே இங்கே
வாடுகின்றேன் நிம்மதிதான் எங்கே? எங்கே?
மனமதுவும் வருத்தத்தில் இங்கே இங்கே
ஓடுகின்றேன் அச்சத்தில் எங்கே?எங்கே?
உள்ளத்தில் பீதியுடன் இங்கே இங்கே
நாடுகின்றேன் இறைவனையே எங்கே? எங்கே?
நன்மையினைச்  செய்திடுவான் இங்கே? இங்கே?

கூடுகின்ற கூட்டமுந்தான் ஏனோ இங்கே
குரங்கினைப்போல் தீநுண்மி வம்பாய் வந்தே
வீடடங்கி நில்லாது சென்றால் நீயும்
வெளியேதாம் காத்திருக்கும் உன்னைச் சேர
காடடங்கிப் போய்விடவா துள்ளு கின்றாய்
கவனமின்றி இருந்திடவும் உன்னைச் சாய்க்கும்
போடுகின்றத் திட்டங்கள் எங்கே எங்கே?
புதுவகையாய்த் தோன்றிடுதே  விடைதான் எங்கே?

கோடியாக வைத்திருப்பார் எங்கே எங்கே?
கூட்டமாகப்  போய்ச்சேர்ந்தார் அங்கே அங்கே
தேடிவந்து பற்றிவிடும் அங்கு மிங்கும்
தெய்வங்கள் காத்திடுமோ தங்கி இங்கும்
ஓடிடவும் வழியில்லை இங்கு அங்கும்
ஒளிந்திடவும் வழியில்லை தங்க எங்கும்
மாடிவீடு மச்சுவீடு பார்க்க வில்லை
மறைந்துநின்று தாக்குதய்யா விடைதான் என்ன?

**தென்றல் கவி**

# அமைதி எங்கே?



இப்படியே நகர்ந்திடுமா கால மென்றும்
இனிமைகளும் நம்வாழ்வில் கூடும்?கூடும்?
தப்படிநாம் நடந்தாலும் துரத்தி வந்து
சங்கினையே பிடிக்கின்ற  கால மம்மா
குப்பென்று வியர்க்கின்ற வியர்வை நீரில்
குளிக்கின்ற அச்சத்தில் மக்கள் வெள்ளம்
எப்படியும் மாறிடுமோ மாற்றம் கொண்டே
இப்படித்தான் சென்றிடுமோ உலகம்? அய்யோ

விடைதேடி விடைதேடி விழித்து நின்றேன்
வினாக்களுக்கு விடைதேட அலுத்தேப் போனேன்
கடைவிழியின் பார்வையினில் கலக்கம் கண்டேன்
கண்விழிக்க நற்பொழுது  வேண்டி நின்றேன்
தடையின்றிப் பெருந்தொற்று தொற்றக் கண்டேன்
தடதடக்கும் இதயத்துள் அச்சம் கொண்டேன்
மடைதிறந்த வெள்ளம்போல் மடியக் கண்டேன்
மக்களிங்கே பிணக்காடாய்க் குவிய கண்டேன்

எப்பொழுது நல்லமைதி கிடைக்கும் என்றே
இங்குள்ள சாமியெல்லாம் அழைத்தே நின்றேன்
தப்பிக்க வழிதேடி வேண்டி நின்றேன்
தமக்குள்ளே அழுதேதான் புலம்பி நின்றேன்
முப்பொழுதும்  சிந்தனையால் குழப்பம் கொண்டேன்
முருகனருள் கிடைத்திடுமா ஏக்கம் கொண்டேன்
அப்பிடுதே மனக்கவலை தீரா தென்றும்
அயர்ந்துநானும் உறங்கிடுமக் காலம் என்றோ?

தமிழ்சிட்டு

ISSN 2719 - 2520

# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

செப்டம்பர் - அக்டோபர் 2021

# தன்முனைக் கவிதைகள்

01
நகரும் முட்கள்
மனதை தைக்குது,
பொழுதோடு வாவென்ற
அப்பாவின் வார்த்தை.

02
வண்ண பலூன்
விற்கும் வியாபாரி,
வாழ்க்கையின் நிறமோ
இன்னும் கறுப்புத்தான்.

03
என் பாடலுக்கு
கை தட்டல் எதற்கு,
வயிறு நிறையட்டும்,
தட்டை நிறையுங்கள்.

04
குடும்ப குத்து விளக்காய்
அழகில் ஜொலிக்கிறாள்,
சேலை விளம்பரத்தில்
கவர்ச்சி நடிகை.

05
சின்ன மகன்
ஊதித் தள்ளுகிறான்,
நகர மறுத்த
காகிதக் கப்பலை.

06
இயந்திர அறுவடை,
தவறும் நெற்கதிர்கள்,
சிலவேளை உணவாகும்
சேர்த்தெடுக்கும் ஏழைக்கு.

07
முற்றத்தைப் பார்த்துக் கத்தும்
காக்கையிடம் எப்படிச் சொல்வேன்,
நானும் இன்று
பட்டினிதான் என்று.



08
நிசப்த இரவொன்றில்
வந்து சென்றாய்,
விடிந்ததும் புரிந்தது
எல்லாம் கனவென்று.

09
விலை மதிக்க
முடியாது தவிக்கிறேன்,
நீயோ மீளவும்
புன்னகைத்துச் செல்கிறாய்.

10
உணர்ச்சிப் பிழம்பு
வக்கிரம் நிறைந்ததா,
சிதைந்து கிடக்கிறாள்
ஏழைச் சிறுமி.

அய்ஷத்அப்சத்
பாலமுனை - இலங்கை